செந்தமிழறிஞர்கள் 108

பதுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

கு அழகிரிசாமி





NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

ISBN : 978-81-686100-0-2

https://www.annacentenarylibrary.org/pages/view/118.%20%E0%AE%95%E0%AF%81.%E0%AE%85%E0%AE%B4%E0%AE%95%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF_1923

செந்தமிழ்சிற்பிகள்

கு.அழகிரிசாமி (1923 - 1970)



அறிமுகம்

கு. அழகிரிசாமி (செப்டம்பர் 23, 1923 - சூலை 5, 1970) குறிப்பிடத்தக்க தமிழ் எழுத்தாளர்.20ஆம் நூற்றாண்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளராகத் திகழ்ந்த அழகிரிசாமி, சிறுகதை, கட்டுரை, புதினங்கள், நாடகங்கள், மேடை நாடகங்கள், கவிதைகள், கீர்த்தனைகள், மொழிபெயர்ப்புகள் என்று பல துறைகளில் சாதனை புரிந்துள்ளார்.

இவர் எழுத்தாளர் கி. ராஜநாராயணின் இளமைக் கால நண்பர். தமிழ் நேசன் (மலேசியா), சக்தி, சோவியத் நாடு, பிரசண்ட விகடன் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றினார். இலக்கிய உலகில் இவரது சிறு கதைகள் புகழ்பெற்றவை.

1970 இல், இவரது அன்பளிப்பு என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது..

வாழ்க்கைச் சுருக்கம்

அழகிரிசாமி திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டிக்கும் கயத் தாறுக்கும் இடையில் இடைசெவல் என்னும் சிற்றூரில், குருசாமி-தாயம்மாள் ஆகியோருக்கு முதல் மகனாகப் பிறந்தார். பரம்பரையாக வீட்டில் தெலுங்கு பேசுபவர்கள் அழகிரிசாமியின் குடும்பத்தார். ஆனால், வெளியே பேசும்போது தமிழில்தான் பேசுவார் அழகிரிசாமி.

வசதியின்மை காரணமாக அவரை நான்காவது வரைகூட படிக்க வைக்க அவரது பெற்றோரால் முடியவில்லை. ஆனால், விடாமுயற்சியுடன் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து முடித்தார். அந்தச் சிற்றூரில் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர் என்ற "பெருமை' அவருக்கு உண்டு. பள்ளிப் படிப்பைவிட அவர் அனுபவத்தில் பெற்ற அறிவே அதிகம். 'உறக்கம் கொள்ளுமா?' என்ற இவரது முதல் சிறுகதை 1943-ஆம் ஆண்டு "ஆனந்த போதினி' மாத இதழில் பிரசுரமானது.

ரஷ்ய எழுத்தாளர் கார்க்கியின் எழுத்து அவரை மிகவும் கவர்ந்தது. கார்க்கியின் நூலை முதன் முதலில் தமிழாக்கம் செய்தவர் இவர்தான். தமிழ் இலக்கியங்களுடன் மேல்நாட்டு இலக்கியங்களையும் படித்தார். பழைய பாடல்களுக்கு உரை எழுதும் ஆற்றலையும் வளர்த்துக்கொண்டார்.

இதழாசிரியராக

அரசுப் பணியில் சேரத் தேர்வு பெற்றதால், சார்பதிவாளர் அலுவலகத்தில் முப்பத்தைந்து ரூபாய் சம்பளத்தில் எழுத்தர் உத்தியோகம் கிடைத்தது. ஆனால், நாள்தோறும் பத்திரங்களைப் பதிவது அவருக்குப் பிடிக்கவில்லை. அந்த எழுத்தர் உத்தியோகத்தில் மனநிறைவு ஏற்படவில்லை. அதனால் சென்னைக்கு வந்து,

முதல் கதையை வெளியிட்ட "ஆனந்த போதினி' பத்திரிகை அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தார்.

"ஆனந்த போதினி','பிரசண்ட விகடன்' ஆசிரியராக இருந்த மூத்த எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன் அழகிரிசாமியின் எழுத்தாற்றலைப் புரிந்து கொண்டு, அவருக்கு உதவி ஆசிரியர் பணியைத் தந்தார்.

"பிரசண்ட விகடனி'ல் வெளிவந்த அவரது கதைகளை சமகால எழுத்தாளர்களான வல்லிக்கண்ணனும், புதுமைப்பித்தனும், தொ.மு.சி.ரகுநாதனும் பாராட்டினார்கள். பிரசண்ட விகடன் பத்திரிகை அலுவலகத்தை விட்டுவிட்டு "தமிழ்மணி' என்ற அரசியல் வார இதழில் சேர்ந்தார்.

"தமிழ்மணி' வார இதழில் அவர் சில காலம்தான் பணியாற்றினார். அதன் பிறகு வை.கோவிந்தன் வெளியிட்ட "சக்தி' மாத இதழில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். அதன் ஆசிரியராக இருந்தவர் தி. ஜ. ரங்கநாதன். கு.அழகிரிசாமியின் முற்போக்குச் சிந்தனையையும், ஆற்றலையும் கண்டுகொண்ட வை.கோவிந்தன், அழகிரிசாமிக்கு சக்தி இதழிலும் பதிப்பகத்திலும் இடமளித்து, எழுதுவதற்கு வாய்ப்பளித்தார்.

அழகிரிசாமியின் முயற்சியால் வெளியான கம்பராமாயணம், காவடிச் சிந்து ஆகிய பதிப்புகள் அவருடைய ஆராய்ச்சித் திறனையும் மொழியாக்க ஆற்றலையும் வெளி உலகுக்குத் தெரியப்படுத்தின.

"ராஜா வந்திருக்கிறார்' என்ற அவரது கதை இந்திய மொழிகளிலும், ரஷ்ய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த கதை.

மலேசியாவில் பணி

"சக்தி' இதழில் பணியாற்றிய பிறகு ஐந்தாண்டுகள் மலேசியா (1952-1957) சென்றார். அந்தக் காலம் அவர் வாழ்க்கையின் பெரும் திருப்புமுனை எனலாம்.1955ஆம் ஆண்டு கு.அழகிரிசாமிக்கும், சீதாலட்சுமிக்கும் மலேசியாவில் திருமணம் நடைபெற்றது.

மலேசிய வானொலியில் முக்கூடல் பள்ளு இசை நாடகத்துக்குப் பாடியவர்களில் ஒருவர் சீதாலட்சுமி.

மலேசியாவில் இருந்து மீண்டும் தமிழகம் வந்ததற்கு “மலேசிய நாட்டில் தன்னுடைய இலக்கிய வாழ்க்கைக்கு உற்ற நண்பர்கள் இல்லை என்பதாலும், தமிழ் நாட்டு அன்பர்களை விட்டுப் பிரிந்திருக்க மனமில்லாததாலும் நான் மலேசியா நாட்டை விட்டு தமிழ்நாட்டுக்குத் திரும்பினேன்” என்று அழகிரிசாமி காரணம் கூறினார். மேலும், "தமிழ்நேசன்' நாளிதழ் அலுவலகத்திலும் வெளியே அரசியல்வாதிகள் சிலரின் ஒத்துழையாமையும் அவருக்கு ஆசிரியர் பணியில் சோர்வை ஏற்படுத்தின.

மீண்டும் தமிழகத்தில்

1957-ஆம் ஆண்டு சென்னை திரும்பிய அவர், 1960ஆம் ஆண்டு வரை காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். பிறகு "நவசக்தி' நாளிதழில் 1965 வரை பணியில் இருந்தார். ‘நவசக்தி' இதழில் இருந்த காலத்தில்தான் அவர் "கவிச்சக்ரவர்த்தி' என்ற வரலாற்று நாடகத்தை எழுதினார். அந்த நாடகம் அவருக்குப் பெயரையும் புகழையும் பெற்றுத்தந்தது.


"நவசக்தி' நாளிதழ் பணியிலிருந்து விலகி, ஐந்தாண்டுகள் சுதந்திர எழுத்தாளராக இருந்தார். கடிதம் எழுதுவதை அவர் கடமையாகக் கொண்டிருந்தார். அவ்வாறு அவர் எழுதிய கடிதங்களை கி.ராஜநாராயணன் தொகுத்து, ‘கு.அழகிரிசாமி கடிதங்கள்' என்ற நூல் வெளிவந்துள்ளது. கு.அழகிரிசாமியின் சிறுகதைகள் ஒன்பது தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

இறுதியாக "சோவியத் நாடு' ஆசிரியர் குழுவில் சேர்ந்தார். ஆனால், உடல்நிலை காரணமாக அவரால் முழுமையாக அந்தப் பணியில் தொடர முடியவில்லை.

(😊)(😊)(😊) @@@@@@ (😊)(😊)(😊)

தமிழ் இணையக் கல்விக்கழகம்
TAMIL VIRTUAL ACADEMY
https://www.tamilvu.org/ta/courses-degree-p101-p1011-html-p1011441-23848

4.1 கு. அழகிரிசாமி - அறிமுகம்



சக்தி இதழ் மூலம் தமிழ்ச் சிறுகதை உலகில் தடம் பதித்தவர் எழுத்தாளர் கு.அழகிரிசாமி. அவர் இன்றைய சிறுகதை எழுத்தாளர்களுக்கு முன்னோடியாகத் திகழ்பவர். புதுமைப்பித்தனுக்குப் பின் தமிழ்ச் சிறுகதைத் தளத்தில் அதிகம் நினைத்துப் பார்க்கத்தக்கவர். அவருடைய கதைகள், அவர் பிறந்த கரிசல் மண்ணான திருநெல்வேலி மண்ணையும், அவர் வாழ்ந்த கால மக்களையும் நன்கு பதிவு செய்துள்ளன. அக்கதைகளில் ஆழமான மனித நேயத்தைக் காண முடியும். அவரது கதைகள் தமிழ் இலக்கியத்திற்குக் கிடைத்த கொடை எனலாம்.

4.1.1 பிறப்பும் வளர்ப்பும்

எழுத்தாளர் கு.அழகிரிசாமி திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டிக்கு அருகில் உள்ள இடைச்செவல் என்னும் ஊரில் 1923ஆம் ஆண்டு செப்டம்பர் 24ஆம் நாள் பிறந்தார். வீட்டார் இவரைச் செல்லையா என்ற பெயரில் அழைத்து வந்தனர். சிறிய வயது முதற்கொண்டே இவர் படம் வரைவது, பாடல்களைத் தானே கற்பனையில் உருவாக்கிப் பாடுவது, பஜனைப் பாடல்கள் பாடுவது என்று தன்னைக் கலைப் பாங்கோடு வளர்த்துக் கொண்டவராவார். கோவில்பட்டி உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்புவரை படித்தார். பின்பு தானே முயன்று பல நூல்களைப் படித்தறிந்தும், நூல்

வல்லோரிடம் பழகியும், தன் இலக்கிய அறிவையும், பிற துறை அறிவையும் வளர்த்துக் கொண்டார். தன் முப்பத்திரண்டாம் வயதில் **சீதாலெட்சுமி** என்ற பெண்ணைக் காதலித்து மணந்து கொண்டார்.

- **இறுதிக் காலம்**

எழுத்தாளர் கு.அழகிரிசாமி 47 ஆண்டுகளே வாழ்ந்துள்ளார். 1970ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் நாள் மறைந்தவர். அவர், தம் வாழ்நாளில் மிகப் பல நூல்களைத் தந்து சென்றுள்ளது அவரின் கடும் உழைப்பிற்குச் சான்றாகும். தாம் வாழ்ந்த காலத்திற்குள் **கவிமணி, வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், ரசிகமணி டி.கே.சி., திரு.வி.க., பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை, வெ.சாமிநாத சர்மா, தி.ஜ.ர., வ.ரா.** போன்ற தமிழ்ப் பெரியார்களுடனும், **சக்தி வை.கோவிந்தன்,** தமிழ்ப் புத்தகாலய அதிபர் **கண. முத்தையா,** நாகஸ்வரக் கலைஞர் **காருக்குறிச்சி அருணாசலம்** ஆகியோருடனும் நெருங்கிப் பழகியுள்ளார். இவ்வாறு, துறை வல்லார்களிடம் அவர் கொண்டிருந்த நட்பும் பழக்கமும் அவரைச் செழுமைப்படுத்தியதுடன், அவருடைய எழுத்தாளுமையையும் வளர்த்துள்ளன.

4.1.2 எழுத்துலக நுழைவு

கு.அழகிரிசாமி தொடக்கப் பள்ளி ஆசிரியராகத் தம் பணியைத் தொடங்கினார். பின்பு, சார்பதிவாளர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணியில் அமர்ந்தார். பின்னர் அதை விடுத்து முழுநேர எழுத்தாளராக, பத்திரிக்கையாளராகத் தம்மை வளர்த்துக் கொண்டார். இவர், தம் பதினாறாவது வயதில் **உறக்கம் கொள்வான்** என்ற தலைப்பில் தம் முதல் சிறுகதையை எழுதினார். அது முதல், தம் இறுதிக் காலம் வரையில் எழுத்துத் துறையில் முன்னேறக் கடுமையாக உழைத்துள்ளார். புதுமைப்பித்தனைப் போலவே, இவர் பத்திரிக்கைத் துறையிலும், படைப்பிலக்கியத் துறையிலும் ஒரே நேரத்தில் ஈடுபட்டவராவார். 1943ஆம் ஆண்டு முதல் **பிரசண்ட விகடன்** துணை ஆசிரியராகவும், 1946இல் **தமிழ்மணி** பொறுப்பாசிரியராகவும், 1952ஆம் ஆண்டு வரை **சக்தி** இதழிலும் பணியாற்றினார். பின்பு மலேசியா சென்று 1957ஆம் ஆண்டு வரை **தமிழ்நேசன்** என்ற இதழில் துணையாசிரியராகப் பணிபுரிந்தார். 1958ஆம் ஆண்டு முதல் இரண்டாண்டுக் காலம் சென்னையில் **காந்தி நூல்** வெளியீட்டுக்

குழுவின் துணையாசிரியராக இருந்தார். 1960 முதல் 1965 வரை நவசக்தி இதழில் பணியாற்றியுள்ளார்.

- **கையாண்ட இலக்கிய வகைகள்**

கு.அழகிரிசாமி பல இலக்கிய வகைகளைக் கையாண்டு, தம் இலக்கியப் படைப்பாளுமையை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார். சிறுகதை ஆசிரியர், நாவலாசிரியர், நாடக ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், கட்டுரையாளர், இதழாசிரியர், உரையாசிரியர் என்று பல பரிமாணங்கள் இவருக்கு உண்டு. இவற்றைத் தவிர ஓவியம், கவிதை, கீர்த்தனை, பதங்கள் இவற்றிலும் தேர்ந்தவராக விளங்கினார். மேற்சுட்டிய கலைகளுள் இசையில் கு.அழகிரிசாமிக்கு விருப்பம் அதிகம். கர்நாடக இசையை முறையாகக் கற்றுக் கொண்டுள்ளார். தியாகராஜர் கீர்த்தனைகளின் மீது அளவற்ற பற்றுக் கொண்டவர். அவர் வாழ்வினை அடிப்படையாகக் கொண்ட திரிவேணி என்ற சிறுகதைப் படைப்பாக்கம்தான் அவர் பெயரை நிலை நாட்டியது.

4.1.3 எழுதிய நூல்கள்

அழகிரிசாமி கதைகள், அன்பளிப்பு, இரு சகோதரர்கள், கற்பக விருட்சம், காலகண்டி, சிரிக்கவில்லை, தவப்பயன், தெய்வம் பிறந்தது, வரப்பிரசாதம் என்ற சிறுகதைத் தொகுதிகளை எழுதியுள்ளார். இவற்றில், அன்பளிப்பு என்ற சிறுகதைத் தொகுதிக்காக 1970ஆம் ஆண்டின் சாகித்திய அக்காதமியின் விருதினைப் பெற்றுள்ளார். டாக்டர் அனுராதா, தீராத விளையாட்டு, புதுவீடு புதுஉலகம், வாழ்க்கைப் பாதை என்பன அவர் எழுதிய புதினங்களாகும். காளி வரம், மூன்று பிள்ளைகள் என்பன சிறுவர் கதைத் தொகுதிகளாகும். பலநாட்டுச் சிறுகதைகளையும், சோவியத் எழுத்தாளர்களுடைய படைப்புகளையும் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். கவிச்சக்கரவர்த்தி, வஞ்சமகள் என்பன அவர் எழுதிய நாடகங்களாகும். அண்ணாமலை ரெட்டியாரின் உரையுடன் கூடிய கம்பராமாயணம், காவடிச் சிந்து ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். இலக்கியச் சுவை, இலக்கியத் தேன், இலக்கிய விருந்து, இலக்கிய அமுதம், தமிழ் தந்த கவிச் செல்வம், தமிழ் தந்த கவியமுதம், தமிழ் தந்த கவி இன்பம் ஆகியன அவருடைய கட்டுரைத் தொகுதிகளாகும். அவருடைய இறப்புக்குப் பின் கு.அழகிரிசாமி கட்டுரைகள் என்ற பெயரிலும் ஒரு தொகுதி

வெளிவந்துள்ளது. திருக்குறளுக்கு எளிய நடையில் மிகச் சுருக்கமாக உரை எழுதியுள்ளார். மலேசியாவில் இருந்த போது இலக்கிய வட்டம் என்ற அமைப்பை உருவாக்கி அதன் மூலம் மலேசியா வாழ் தமிழர்களுக்காகப் படைப்பிலக்கியப் பயிற்சி அளித்துள்ளார். கு.அழகிரிசாமி சிறந்த இலக்கியச் சொற்பொழிவாளர் ஆவார். ஈழநாடு முழுவதும் பயணம் செய்து சொற்பொழிவாற்றியுள்ளார்.

4.1.4 தனித் திறன்கள்

கு.அழகிரிசாமி உயர்கல்வி படித்தவர் அல்லர் என்றாலும், தம்மைத் தனிப்பட்ட முறையில் தகுதிப்படுத்திக் கொண்டவராவார். அவர் சிறந்த இலக்கிய ஆராய்ச்சியாளராகவும் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளார். அவரது இலக்கியக் கட்டுரைகள், அவரது படிப்பின் அகலத்தைக் காட்டுவதுடன், அவரது ஆய்வுத் திறனையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. பிறமொழி இலக்கியங்களைத் தமிழ் மொழி இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யும் ஒப்பாய்வு முறை அவரிடத்தில் காணப்படுகிறது. **எங்ஙனம் சென்றிருந்தேன்?, காணி நிலம்** என்ற கட்டுரைகள் அவருடைய ஒப்பாய்வுத் திறனுக்குச் சரியான எடுத்துக்காட்டுகளாகும். **புகையிலையும் இலக்கியமும்** என்ற கட்டுரை பல்துறை ஆய்வாகச் **(Multi Disciplinary Research)** சிறந்துள்ளது. சிறந்த நூல் மதிப்புரைகளையும் இவர் பத்திரிகை ஆசிரியராக இருந்த போது செய்துள்ளார். அத்துடன், கு.அழகிரிசாமி சிறந்த தகவல் சேகரிப்பாளராகவும் இருந்துள்ளார். சேகரித்த தொகுப்புகளைக் குறிப்புகளுடன் பாதுகாத்துள்ளார். மலேசியாவில், கு.அ. பரம்பரை என அடக்கமாகக் கூறிக்கொள்ளும் பல எழுத்தாளர்கள் இவருடைய பாணியில் தோன்றி இன்றும் கதை படைத்து வருகின்றனர்.

படைப்புகள்

புதினங்கள்

- டாக்டர் அனுராதா
- தீராத விளையாட்டு
- புது வீடு புது உலகம்
- வாழ்க்கைப் பாதை

சிறுவர் இலக்கியம்

- மூன்று பிள்ளைகள்
- காளிவரம்

மொழிபெயர்ப்புகள்

- தர்மரட்சகன் (1950) (குஸ்தாவ் ப்ளாப்ர்ட் புதினம் ஜுலியஸ்)
- மாக்சிம் கார்க்கியின் நூல்கள்
- லெனினுடன் சில நாட்கள்
- அமெரிக்காவிலே
- யுத்தம் வேண்டாம்
- விரோதி
- பணியவிட்டால்
- பலநாட்டுச் சிறுகதைகள் (1961, தமிழ் புத்தகாலயம்)
- லாரன்ஸ் பின்யன் (1966, NBT)

நாடகங்கள்

- வஞ்ச மகள்
- கவிச்சக்கரவர்த்தி


சிறுகதைத் தொகுப்புகள்

- அன்பளிப்பு
- சிரிக்கவில்லை
- காதல்போட்டி (சக்தி காரியாலயம், 1951)
- தவப்பயன்
- வரப்பிரசாதம்
- கவியும் காதலும்
- செவிசாய்க்க ஒருவன்
- புதிய ரோஜா
- துறவு
- கற்பக விருட்சம்

கட்டுரைத் தொகுப்பு

- இலக்கியத்தேன்
- தமிழ் தந்த கவியின்பம்
- தமிழ் தந்த கவிச்செல்வம்
- நான் கண்ட எழுத்தாளர்கள்

இலக்கியவாழ்க்கை



இதம் தந்த வரிகள்

அழகிரிசாமி 1942-ல் தன் முதல் படைப்பான 'உறக்கம் கொள்ளுமா' எனும் கதையை ஆனந்தபோதினியில் வெளியிட்டார். இதழ்களில் பணியில் சேர்ந்தபின் வெவ்வேறு பெயர்களில் இதழ்களில் எழுதினார். முதன்மையாகச் சிறுகதைகளே அழகிரிசாமியின் இலக்கியச் சாதனைகள். கல்கி முதலிய இதழ்களில் தொடர்கதைகளும் எழுதினார். அவருடைய தொடர்கதைகள் நாவல்களுக்குரிய கலைத்தன்மை கொண்டவை அல்ல.

மொழியாக்கங்கள்

அழகிரிசாமி சென்னையில் இதழ்களில் வேலைபார்க்கும்போது ரஷ்ய இலக்கியம் மீது ஆர்வம்கொண்டு 1950-ல் மாக்ஸிம் கார்க்கியின் அமெரிக்காவிலே, லெனினுடன் சில நாட்கள் ஆகிய நூல்களை மொழியாக்கம் செய்தார். பின்னர் 1957 முதல் 1960 வரை காந்தி நூல்வெளியீட்டு நிலையத்தில் பணிபுரியும்போது மாக்சிம் கார்க்கியின் யுத்தம் வேண்டாம், விரோதி பணியாவிட்டால் ஆகிய கட்டுரைநூல்களை

தமிழில் கொண்டுவந்தார். பலநாட்டுச் சிறுகதைகள் என்னும் பெயரில் கதைகளை மொழியாக்கம் செய்தார். லாரன்ஸ் பன்யனின் அக்பர், குடியரசுத்தலைவர் ராஜேந்திரபிரசாத்தின் இந்திய ஒருமைப்பாடு, ஆகியநூல்களை மொழியாக்கம் செய்தார்.

பதிப்புப்பணி

அழகிரிசாமிக்கு சிற்றிலக்கியங்கள், நாட்டாரிலக்கியங்களை முறையாகப் பதிப்பிக்கவேண்டும் என்னும் ஆர்வம் இருந்தது. பதிப்பிக்க எண்ணிய நூல்களைப்பற்றி அவர் கி.ராஜநாராயணனுக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிடுகிறார். சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் எழுதிய காவடிச்சிந்து நூலின் செம்மைசெய்யப்பட்ட பதிப்பை அழகிரிசாமி தொகுக்க சக்தி காரியாலயம் வெளியிட்டது. கம்பராமாயணத்தில் ஐந்து காண்டங்களையும் குறிப்புகளுடன் பதிப்பித்தார். ஆண்டான் கவிராயர் போன்ற அறியப்படாத கவிஞர்களின் தனிப்பாடல்களை திரட்டி நூலாக்குவதைப் பற்றி கி.ராஜநாராயணனுக்கு ஆர்வத்துடன் எழுதியிருக்கிறார்

நாடகங்கள்

கு.அழகிரிசாமிக்கு நாடகங்கள் மேல் தொடர் ஈடுபாடு இருந்தது. அவர் எழுதிய கவிச்சக்கரவர்த்தி கம்பர் என்னும் நாடகம் எஸ்.வி.சகஸ்ரநாமம் குழுவினரால் மேடையேற்றப்பட்டது.

புனைவிலக்கியங்கள்

1952-ல் அழகிரிசாமி எழுதிய 'கு.அழகிரிசாமியின் கதைகள்' என்னும் நூல் சக்தி காரியாலயத்தால் வெளியிடப்பட்டது. அழகிரிசாமி நாவல்களை இதழ்களில் தொடராக எழுதினார். முழுநேர எழுத்தாளரானபிறகு சுதேசமித்திரன், கல்கி போன்ற இதழ்களில் தொடர்நாவல்கள் வெளிவந்தன. அவருடைய சிறந்த சிறுகதைகள் 1960 முதல் 1965 வரையிலான காலகட்டத்தில் அவர் நவசக்தி இதழில் பணியாற்றியபோது எழுதப்பட்டவை. கு.அழகிரிசாமி தொ.மு.சி.

ரகுநாதன் புதுமைப்பித்தன் ஜெயகாந்தன் வல்லிக்கண்ணன் போன்றவர்களுக்கு அணுக்கமான இலக்கிய நண்பராகத் திகழ்ந்தார்.


கடித இலக்கியம்

கு.அழகிரிசாமிக்கும் கி.ராஜநாராயணனுக்கும் டி.கே.சிதம்பரநாத முதலியார் மீது மிகப்பெரிய ஈடுபாடு இருந்தது. அவருடைய கடிதமெழுதும் பாணியை அவர்கள் கடைப்பிடித்தனர். தமிழ் கடித இலக்கியத்தில் அவர்கள் எழுதிய கடிதங்களுக்கு முக்கியமான இடம் உண்டு. அழகிரிசாமி கி.ராஜநாராயணனுக்கு எழுதிய கடிதங்களும் சுந்தர ராமசாமிக்கு எழுதிய கடிதங்களும் (இதம் தந்த வரிகள்) தொகுக்கப்பட்டுள்ளன.

மரபிலக்கியம்

கு. அழகிரிசாமிக்கு மரபிலக்கியம் மீது தீவிரமான ஈடுபாடு இருந்தது. சிற்றிலக்கியங்களிலும் தனிப்பாடல்களிலும் ரசனைக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அவை நூல்வடிவில் வெளிவந்தன. ரசனை மரபில் டி.கே.சிதம்பரநாத முதலியாரின் வழியை அழகிரிசாமி கடைப்பிடித்தார்.இலக்கியத்தேன், தமிழ் தந்த கவியின்பம், தமிழ் தந்த கவிச்செல்வம் ஆகியவை அவருடைய ரசனைக் கட்டுரைகள்.

மலேசிய இலக்கியப் பணி



கு.அழகிரிசாமி

1952 முதல் 1957 வரை கு.அழகிரிசாமி மலேசியாவில் தமிழ் நேசன் இதழில் பணியாற்றிய காலமே மலேசிய இலக்கியத்தின்

மறுமலர்ச்சிக்காலம் என்று சொல்லப்படுகிறது. அதுவரை மிக ஆரம்பநிலையில், அரசியல் சார்ந்து படைப்புகள் அங்கே உருவாகிக் கொண்டிருந்தன. நவீனத்தமிழ்க் கவிதைகளை தமிழ்நேசனில் வெளியிட்டார். புதிய எழுத்தாளர்களை கண்டுபிடித்து ஊக்கப்படுத்தினார். மாதந்தோறும் மலேசியாவின் எழுத்தாளர்களும் ஆர்வலர்களும் சந்திக்கும் இலக்கியக்கூடுகைகளை நடத்தினார்.அவரை முன்னோடியாகக் கொண்டு கமலநாதன், துரைராஜ் போன்ற எழுத்தாளர்கள் மலேசியாவில் உருவாயினர்.

அழகிரிசாமி மலேசியாவை விட்டு வந்தபின் அவருடைய பங்களிப்பு அங்கே உணரப்பட்டது. 1983-ல் அவருடைய கு.அழகிரிசாமி கதைகள் என்னும் தொகுப்பு மலேசியாவில் வெளியிடப்பட்டது. மலேசிய அமைச்சர் டத்தோ சாமிவேலு தலைமையில் நிகழ்ந்த விழாவில் அழகிரிசாமியின் மனைவி சீதாலட்சுமி அந்நூலை வெளியிட்டார். அவருடைய இரு நாடகங்களும் மலேசியாவில் பாடநூலாக வைக்கப்பட்டன. மலேசிய இலக்கிய வரலாற்றில் கு.அழகிரிசாமி முன்னோடிகளில் ஒருவராகத் தொடர்ந்து குறிப்பிடப்படுகிறார்.

இலக்கிய இடம்

கு.அழகிரிசாமி முதன்மையாகச் சிறுகதையாசிரியராகவே நினைவுகூரப்படுகிறார். புதுமைப்பித்தனுக்குப் பின் யதார்த்தவாதச் சிறுகதையில் முதன்மைச்சாதனையாளர் கு.அழகிரிசாமிதான் என்னும் விமர்சன மதிப்பீடு உண்டு. அழகிரிசாமியின் கதைகள் நேரடியானவை, எளிய மொழியில் பெரும்பாலும் உரையாடல்கள் வழியாக முன்னகர்பவை.

கு.அழகிரிசாமி உத்திச்சோதனைகள் செய்யவில்லை. கதைகளை பூடகமாக்க முயலவுமில்லை. பெரும்பாலான கதைகள் வாழ்க்கையை வெளிப்படையாகச் சொல்வனவாக, சிறுகதை வடிவம் அமையாதவையாகவே உள்ளன. ஆனால் அவருடைய சிறந்த கதைகளில் தன்னியல்பாகவே மானுடநேயம் என்று சொல்லப்படும் உளநிலையின்

உச்சம் வெளிப்படுகிறது. உறவுச்சிக்கல்களின் ஆழம் தொட்டுக் காட்டப்படுகிறது. அக்கதைகள் தமிழிலக்கியத்தின் சாதனைகளாகக் கருதப்படுகின்றன.

"பாத்திரங்களை எடுத்துக்கூறும் முறையிலும், சம்பவங்களை விளக்கும் நகைச்சுவைத் திறனிலும், யதார்த்த வாழ்வின் அடித்தளத்திற் காணப்படும் மனிதாய நிலைகளை எடுத்துக்காட்டும் சிறப்பினும் அழகிரிசாமிக்கு இன்றைய தமிழ்ச்சிறுகதையுலகில் இணையொருவருமில்லை" என்று மதிப்பிடுகிறார் கார்த்திகேசு சிவத்தம்பி.

'அழகிரிசாமி, புதுமைப்பித்தனின் குடும்பத்தைச் சார்ந்தவர் என்று கருத ஏதுக்கள் இருப்பினும், உண்மையில் அவர் கு.ப.ரா.வின் குடும்பத்தைச் சார்ந்தவர். கு.ப.ரா.வின் வலிமையான வாரிசு. மனித இயல்பைப் புதுமைப்பித்தனைப் போல் ஒரு சிடுக்காகக் காணாமல் அமைப்பின் மீது அதிகக் குறைகளைக் கண்டவர் ஆட்டிக் குலைக்கும் வாழ்விலும் மனித ஜீவன்கள் தக்க வைத்துக்கொண்டிருக்கும் மேன்மைகள் இவரைப் புல்லரிக்கச் செய்கின்றன. கு.ப.ரா.வைப்போல் எளிமையான சாயல்களும் மென்மையான குரலும் மிகுந்த சிறுகதைப் பிரக்ஞையும் கொண்டவர்' என்று சுந்தர ராமசாமி மதிப்பிடுகிறார்.

அருஞ்சொல்

https://www.arunchol.com/perumal-murugan-on-ku-alagirisamy-and-periyar

கு அழகிரிசாமியும் பெரியாரும்



பெருமாள்முருகன்

எழுத்தாளர் கு.அழகிரிசாமியின் நூற்றாண்டு இது. 1923 செப்டம்பர் 23இல் பிறந்து தம் நாற்பத்தேழாம் வயதில் 5 ஜூலை 1970இல் மறைந்த கு.அழகிரிசாமி சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரைகள், பதிப்பு எனக் கணிசமான இலக்கியப் பங்களிப்பைச் செய்துள்ளார். பல துறைகளில் ஈடுபட்டிருந்தாலும் அவரது சிறுகதைகளுக்கு வாசகரிடத்து இருக்கும் செல்வாக்கு தனிதான்.

அழகிரிசாமி எழுதிய சிறுகதைகளின் எண்ணிக்கை 105. அவற்றை முழுமையாகத் தொகுத்துப் பழ.அதியமான் பதிப்பித்திருக்கிறார். கால வரிசையில் கதைகளைக் கொடுத்துள்ளதோடு நூலாக வந்த சிறுகதைத் தொகுப்புகள் முன்னுரைகள், பதிப்புரைகள், தம் கதைகளைப் பற்றிக் கு.அழகிரிசாமி எழுதிய கட்டுரை ஒன்று, தகவல் பட்டியல்கள், வாழ்க்கைக் குறிப்பு என அவசியமான பின்னிணைப்புகள் பலவற்றையும் சேர்த்துள்ளார். நவீன இலக்கியப் பதிப்பு பற்றிய பார்வையுடன் கடுமையாக உழைத்து இப்பதிப்பை அவர் உருவாக்கியுள்ளார். காலச்சுவடு பதிப்பக வெளியீடு.

எனது மறுவாசிப்பு

கு.அழகிரிசாமியின் பத்தொன்பதாம் வயதில் முதல் கதை ('பிரசண்ட விகடன்', 1942) வெளியாகியுள்ளது. மிக இளம் வயதிலேயே எழுத்துக்குள் வந்துவிட்ட அவர் எழுதிய கதைகளை இப்படிப்பட்டவை என்று சட்டென வகைப்படுத்திவிட இயலாது. தென்தமிழ்நாட்டுக் கிராம வாழ்வை மையப்படுத்திச் சில கதைகளை எழுதியுள்ளார். அரசு, தனியார் நிறுவனங்களில் பணியாற்றிய எழுத்தர்களின் குடும்ப வாழ்வைச் சித்திரிக்கும் 'குமாஸ்தா கதை'களை எழுதியிருக்கிறார். நடுத்தரக் குடும்பக் கதைகள் பல. வெளிநாட்டுக்குக் கூலிகளாகச் சென்று துயருற்ற மனிதர்கள்

குறித்தும் கதைகள் உள்ளன. புராணக் கதைகளை மறுவாசிப்புச் செய்யும் கதைகளும் உண்டு. பெண்களையும் குழந்தைகளையும் முதன்மைக் கதாபாத்திரங்களாகக் கொண்டு அவர் எழுதிய பல கதைகள் மிகவும் பிரபலமானவை; இன்றும் பலருக்கு ஆதர்சமாக உள்ளவை.

அழகிரிசாமி நூற்றாண்டு தொடங்கிய நாளன்று சென்னையில் நடைபெற்ற ஆவணப்படத் திரையிடல் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசினேன். அப்போதிருந்து அவர் சிறுகதைகளைத் தொடர்ந்து மறுவாசிப்புக்கு உட்படுத்திவருகிறேன். சாதிப் பெயர்களையும் ஊர்ப் பெயர்களையும் சகஜமாகப் பயன்படுத்தி அவர் காலத்தில் எழுத முடிந்திருக்கிறது என்பதைக் காணும்போது பெருமூச்சு வருகிறது. ஊர்களையும் தெருக்களையும் விரிவாக வருணிக்கவும் செய்கிறார். இன்று வழக்கிழந்துபோன பல நடைமுறைகள் அவர் கதைகளில் காணக் கிடைக்கின்றன. அன்றைய விழுமியங்களில் சிக்கி உணர்ச்சிக்கு ஆளாகும் விதவிதமான மனிதர்களைக் கண்டு வியக்க முடிகிறது.

ஒவ்வொரு கதைக்குமான பின்னணி பற்றிச் சில நிமிடங்களேனும் சிந்திக்காமல் நகர முடியவில்லை. ஒன்றிரண்டு வித்தியாசமான கதைகளின் பின்னணி பிடிபடும்போது வியப்பாக இருக்கிறது. அப்படியான கதைதான் 1944ஆம் ஆண்டு 'பிரசண்ட விகடன்' இதழில் வெளியான 'மளிகைக்கடை சரசுவதி.' இக்கதைக்கு அவர் கொடுத்துள்ள முன்குறிப்பும் கதைக்குள் வரும் பெயர் விளக்கமும் எனக்குத் தந்தை பெரியாரின் கட்டுரை ஒன்றை நினைவுக்குக் கொண்டுவந்தன. அக்காலகட்டத்துத் திராவிட இயக்கச் செயல்பாடுகளையும் பின்னணியில் வைத்துப் பார்க்க முடிந்தது.

தமிழாசிரியர் வரலாறு

எள்ளல் நிறைந்த இரங்கல் கட்டுரை

பெரியாரின் தாயார் சின்னத்தாயம்மாள் 1936ஆம் ஆண்டு தம் 95ஆம் வயதில் மறைந்தார். அதை ஒட்டிப் பெரியார் எழுதிய 'சின்னத் தாயம்மாள் முடிவு' என்னும் கட்டுரை மிகவும் பிரபலமானது. இரங்கல் கட்டுரையை வாய்விட்டுச் சிரித்துக்கொண்டே வாசிக்க முடியுமா? பெரியாரின் அந்தக் கட்டுரையைச் சிரிக்காமல் வாசிக்க இயலாது. அது "எனக்கு அவர் முடிவெய்தியது பற்றி உண்மையிலேயே மகிழ்ச்சி உண்டாயிருக்கிறது. அந்தம்மாளுடைய கோரிக்கை எனக்கு ஒரு கலியாணம் செய்து வைத்துவிட்டுச் சாக வேண்டுமென்பதே. எனது கோரிக்கை – எனக்கு

முன்னதாகவே அம்மையார் முடிவெய்தி விட வேண்டுமென்பதே. என் இஷ்டம் நிறைவேறியது. மகிழ்ச்சி! மகிழ்ச்சி! பூரண மகிழ்ச்சி!" (ஈ.வெ.ரா. பெரியார் சிந்தனைகள், தொகுதி 3, ப.1922) என்று முடியும். ஓர் இரங்கல் கட்டுரையை உண்மையான உணர்வோடு முடிக்கும் தூய பகுத்தறிவு மனம் கொண்டவர் பெரியார்.

அதில்தான் தம் பெற்றோரின் வாழ்வைப் பற்றி விரிவாகப் பதிவுசெய்திருக்கிறார். எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு முன்னேறி வந்தோம் என்று துயரத்தைப் பிழிந்து எழுதும் வாழ்க்கை வரலாறுகள் ஏராளம் உள்ளன. 'கஷ்டப்பட்டு முன்னேறினோம்' என்று சொல்வதுதான் பெருமை என்பது பொதுமனக் கருத்து. அதைப் பெரியாரிடம் எதிர்பார்க்கக் கூடாது. அவரது பெற்றோரும் கஷ்டப்பட்டு முன்னேறியவர்கள்தான். அவர்கள் முன்னேற்றத்தைச் சுய எள்ளலுடன் பெரியார் பதிவுசெய்துள்ளார். வறுமையான வாழ்வில் இருந்தபோது அவர் தந்தை வெங்கட்ட நாயக்கர் கல்தச்சு (கல்லுடைத்தல்?) வேலை செய்தார். பிறகு மாட்டுவண்டி ஓட்டினார்; தட்டுக்கடை வைத்து நடத்தினார்; மளிகைக்கடைக்காரர் ஆனார்; மண்டி தொடங்கினார். அவர் வேலைகள் மாற மாறப் பொருளாதார நிலையும் உயர்ந்துகொண்டே வந்தது. ஈரோட்டில் செல்வாக்குள்ள பெரும் பணக்காரரானார்.

இந்த மாற்றத்தை மிகுந்த எள்ளலோடு பெரியார் குறிப்பிடுகிறார். முதலில் அவர் தந்தை பெயர் 'கல்தச்சு வெங்கட்டன்' என்று வழங்கியதாம். பிறகு 'வண்டிக்கார வெங்கட்ட நாயக்கன்' ஆகியதாம். அடுத்துத் 'தட்டுக்கடை வெங்கட்டன்' என்றானதாம். பின்னர் 'மளிகைக்கடை வெங்கட்ட நாயக்கர்' என அழைத்தனராம். அப்படியே 'மண்டி வெங்கட்ட நாயக்கர்' ஆனாராம். மேலும் பொருளாதார நிலை உயர்ந்து வர வர 'வெங்கட்ட நாயக்கர்' என்னும் பெயரே போய் வெறும் 'நாயக்கர்' ஆகிவிட்டாராம். சின்னத்தாயம்மாள் பெயர் 'நாயக்கம்மாள்' என்றானதாம். பொருளாதார நிலைக்கேற்ப ஒருவர் பெயர் மாறும் உலகியல் வழக்கை இப்படிச் சொல்கிறார் பெரியார்.

சிந்திக்கச் சொன்னவர் பெரியார்

ஒரு கதையும் ஒரு கட்டுரையும்

இந்தக் கட்டுரையின் தாக்கம் என்று கூறத்தக்க வகையிலான கு.அழகிரிசாமியின் கதை 'மளிகைக்கடை சரசுவதி'யில் வரும் பாத்திரத்தின்

பெயர் 'வெங்கடாசலம் பிள்ளை.' இளவயதில் அவர் மளிகைக்கடை ஒன்றில் வேலை செய்கிறார். மளிகைக்கடை உரிமையாளர் அதை மூடுகிறார். வாராக் கடன்களை வசூலிப்பதற்காக வெங்கடாசலம் பிள்ளையை மட்டும் கொஞ்ச நாள் வேலைக்கு வைத்துக்கொள்கிறார். அந்தக் கடனை வசூலிப்பது 'கல்லிலே நார் உரிக்கும்' வேலையாம். பிறகு கோவில்பட்டிக்கு வந்து அங்கே ஒரு மளிகைக்கடையில் வேலைக்குச் சேர்கிறார். அப்போது அவருக்கு இருபத்திரண்டு வயதுதான்.

கடையில் வேலை செய்வோர் அவரை எப்படி அழைப்பது எனக் குழம்புகிறார்கள். "பிராமணாளாயிருந்தால் 'வெங்கு' என்று அழைத்துவிடலாம். கொஞ்சம் கண்ணியமாகவும் இருக்கும்" என்கிறார் கு.அழகிரிசாமி. கடைக் கணக்குப் பிள்ளை விளையாட்டாக 'வெங்குப் பிள்ளை' என்று அழைக்கிறார். அதே வழக்காகிக் கடைப் பையன்கள் எல்லாம் 'வெங்குப் பிள்ளை' என்றே கூப்பிடுகிறார்கள். கடை முதலாளிக்கு ஒரு பிரச்சினை. 'நேற்றுத் தலையெடுத்த பயலுக்குப் பிள்ளைப் பட்டம் வேறா?' என்று தோன்றுகிறது. ஆகவே, இகழ்ச்சியாக 'வெங்கன்' என்று அழைக்கிறார். 'வெங்கன் என்ற சிறப்புப் பெயருக்கும் தமிழ்ப் பாஷையில் அர்த்தம் உண்டு என்பது பின்னால்தான் தெரிய வந்தது' என்று எழுதும் அழகிரிசாமி அந்த அர்த்தம் என்னவென்று சொல்லவில்லை. தமிழ்ப் பேரகராதி 'வெங்கன்', 'வெங்கம்' ஆகிய சொற்களுக்குத் 'தரித்திரன்' என்று பொருள் தருகிறது. வழக்கில் 'வெங்கம்பயல்', 'வெங்கப்பயல்' என வசைச்சொற்கள் இருக்கின்றன. அந்தப் பொருளைத்தான் அழகிரிசாமி குறிப்பால் உணர்த்துகிறார்.

மளிகைக்கடையில் வேலை பார்த்த வெங்கடாசலம் பிள்ளை தனியாக வெற்றிலை பாக்குக் கடை வைக்கிறார். பிறகு மளிகைக் கடை வைக்கிறார். அதன் பிறகு அவருக்கு ஏற்றம்தான். அவர் வளர்ச்சி நிலையை வெங்கன், வெங்குப் பிள்ளை, வெங்கடாசலம் பிள்ளை, வெங்கடாஜலம் பிள்ளை எனப் பெயரைக் கொண்டு அழகிரிசாமி விவரிக்கிறார். அந்த 'வெங்கடாஜலம் பிள்ளை' சரஸ்வதி பூஜை கொண்டாடுவதைக் கதை விவரிக்கிறது. பூஜையின் முடிவில் 'சரசுவதியின் மஞ்சள் முகத்தைப் பிசைந்து உருண்டையாக்கிக் கிணற்றில் போடச் செய்தார்' வெங்கடாஜலம் பிள்ளை.

அழகிரிசாமியின் எதிர்வினை

இயல்பாகவே சரஸ்வதி என்னும் கடவுள் கலைகளுக்கான குறியீடு. வெங்கடாஜலம் பிள்ளையிடம் கலை என்ன பாடு படுகிறது என்பதே கதையின் மையம். அவர் கொண்டாடும் சரஸ்வதி பூஜையைக் கேலியுடன் விவரிக்கிறது கதை. கதையின் தொடக்கத்தில் கொடுத்துள்ள குறிப்பு இது:

“கலைக்கும் இந்த ‘வெங்குப் பிள்ளை’ கூட்டத்துக்கும் உள்ள சம்பந்தம் ‘அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும்’ உள்ள சம்பந்தம்தான். ஆனால், ஒரு தேசத்தின் கலை வளர்ச்சி இந்தக் கூட்டத்தின் கையிலகப்பட்டிருப்பதை நினைக்க எவ்வளவு பயமாக இருக்கிறது” (ப.140)

கதைத் தொடக்கப் பகுதியில் ஒருபத்தி இது:

“சமூகத்தில் எதையும் நல்லது இது, கெட்டது இது என்று நியாயமாகவோ, நியாயமில்லாமலோ நிர்ணயிக்கும் உரிமை பெற்ற ஒரு பிரம்மாண்டமான கூட்டத்தில் வெங்குப் பிள்ளையும் ஒரு மெம்பர். அவர்கள் நிர்ணயிக்கும் அந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் அந்தக் கூட்டத்திற்கு அக்கரையோ கவலையோ இல்லாமலும் இருக்கலாம். அது இன்னது என்று புரியாத நிலையில் அந்தக் கூட்டம் இருந்தாலும் இருக்கும். ஆனால் அதைப் பற்றிய குணதோஷங்களை நிர்ணயிக்கும் அதிகாரம் மட்டும் இந்த வெங்குப் பிள்ளை கூட்டத்துக்கும் கிடைத்துவிட்டது என்பதை மறுக்க முடியாது. ஆனால் கலை வளர்ச்சிக்கு ஆதரவு தேட இப்படிப்பட்ட ‘கலா ரசிகர்’களைத்தான் நாட வேண்டியிருக்கிறது.”

கதையின் முடிவுப் பகுதி இது:

“சமூகத்தில் தோட்டி முதல் தொண்டமான் வரை ஒவ்வொரு ஸ்தானத்திலும் உட்கார்ந்துகொண்டிருக்கும் இப்படிப்பட்ட பல்லாயிரம் ‘வெங்குப் பிள்ளை’களின் கைகளில்தான் நாட்டின் கலை வளர்ச்சி, ஏன் சரசுவதியின் தலையெழுத்தே அகப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மறுக்கிறீர்களா?”

கதையில் வரும் ‘வெங்கடாசலம் பிள்ளை’ என்னும் பெயரைப் பெரியாரின் தந்தை பெயரான ‘வெங்கட்ட நாயக்கர்’ என்பதற்கு அப்படியே பொருத்தலாம். ‘வெங்கட்டன்’ தொடங்கி ‘நாயக்கர்’ வரை அவரது பெயர் எப்படியெல்லாம் மாறிவந்தது எனப் பெரியார் கிண்டல் செய்கிறாரோ அதை அப்படியே எடுத்துக்கொண்டு காத்திரமாகப் பயன்படுத்துகிறார் அழகிரிசாமி. கிட்டத்தட்ட அதே வகையில் ‘வெங்கன்’ முதல் ‘வெங்கடாஜலம் பிள்ளை’ வரை பெயர் மாறிவருகிறது. ‘கல்தச்சு

வெங்கட்டன்' என்று கல்வேலை செய்யும் காலத்தில் தன் தந்தை பெயர் விளங்கிய விதத்தைப் பெரியார் குறிப்பிடுகிறார். மளிகைக் கடைக் கடன்களை வசூலிக்கும் சிரமத்தைக் 'கல்லில் நார் உரிக்கும் வேலை' என்று கு.அழகிரிசாமி ஒற்றை மேற்கோளில் குறிப்பிடுகிறார். இவ்வாறு ஒப்பிட்டுக் காணும்போது பெரியாரின் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு, அவர் தந்தையின் பெயரைக் குறியீடாக வைத்து அழகிரிசாமி இந்தக் கதையை எழுதியிருக்கிறார் என்பது வெளிப்படை.

'வெங்குப் பிள்ளை கூட்டம்', 'இந்தக் கூட்டம்' என்றெல்லாம் கோபத்தோடு அழகிரிசாமி குறிப்பிடுவது பெரியாரையும் அவர் தொண்டர்களையும்தான். அவர்கள் கையில் 'கலை வளர்ச்சி' அகப்பட்டுக்கொண்டிருக்கிறது என்கிறார். இந்தக் கதை 1944ஆம் ஆண்டு 'பிரசண்ட விகடன்' இதழில் வெளியாகியுள்ளது. 1943இல் தொடங்கி நான்கைந்து ஆண்டு காலம் சுயமரியாதை இயக்கம் கம்பராமாயணம், பெரியபுராணம் ஆகியவற்றை எரிக்கும் போராட்டத்தை முன்னெடுத்தது. அவற்றை ஏன் எரிக்க வேண்டும் எனப் பெரியார் பேசினார். பல தமிழறிஞர்களுடன் அறிஞர் அண்ணா மேடையில் விவாதம் நடத்தினார். அண்ணா நடத்திய விவாதத் தொகுப்பு 'தீ பரவட்டும்' (முதற்பதிப்பு, 1943) என நூலாக வெளியாயிற்று. ரா.பி.சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், ஈழத்தடிகள் ஆகியோருடன் 1943ஆம் ஆண்டில் நடத்திய மேடை விவாதங்களின் தொகுப்பு இந்நூல்.

ராமாயணம் இலக்கியமா; புனித நூலா?

பெரியாரின் கிளர்ச்சி

அதே காலகட்டத்தில் 'திராவிட நாடு' இதழில் புனைபெயரில் 'கம்பரசம்' எழுதினார் அண்ணா. அது பின்னர் 1947ஆம் ஆண்டு நூலாக வெளிவந்தது. அந்நூலின் முன்னுரையில் அண்ணா "தமிழ்நாட்டிலே இங்ஙனம் ஓர் உரையாடல் சற்றுக் காரசாரமாகக் கிளம்பிற்று 1943ஆம் ஆண்டும் - அதற்குப் பிறகும். அந்த உரையாடலுக்கான காரணமாக இருந்தது, கம்பராமாயணம் பெரியபுராணம் முதலிய ஏடுகள் தமிழரிடையே ஆரியத்தைப் புகுத்திக் கேடு விளைவித்தன, ஆகவே அவைகளைக் கொளுத்துவதன் மூலம், தமிழர் தமக்கு ஆரியத்தின் மீதுள்ள வெறுப்புணர்ச்சியைக் காட்ட வேண்டும் என்று பெரியார் துவக்கிய கிளர்ச்சியாகும்" என்று குறிப்பிடுகிறார்.

ராமாயணத்தையும் பெரியபுராணத்தையும் கடுமையாக விமர்சித்துப் பெரியாரும் அண்ணாவும் பேசினர்; எழுதினர். அதை எதிர்கொள்ளத் தமிழறிஞர்கள் ‘கவிதைச் சுவை’ என்னும் அழகியல் கோட்பாட்டை முன்வைத்து அக்காப்பியங்களைப் போற்றி எழுதினர்; பேசினர். இந்த விவாதம் பக்தி, பக்தி இலக்கியம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்ட தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பலரையும் கடுங்கோபம் கொள்ளச் செய்தது.

பெரியார் முன்னெடுத்த எரிப்புக் கிளர்ச்சிக்கு அவர்கள் ஏதேனும் ஒருவிதத்தில் எதிர்வினையாற்றினர். ஊர்தோறும் ‘கம்பன் கழகம்’ உருவானதையும் இந்தப் பின்னணியில் வைத்துக் காணலாம். கம்பராமாயணப் பதிப்புகள் பெருக்கம், கம்பராமாயண நய நூல்களின் வளர்ச்சி ஆகியவற்றுக்கும் தூண்டுதலாகப் பெரியாரின் கிளர்ச்சி காரணமாக இருந்தது என்றே சொல்லலாம்.

அழகிரிசாமிக்குப் பிடித்த கம்பராமாயணம்

கம்பராமாயணத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர் கு.அழகிரிசாமி. சிறுவயதிலேயே தம் தாயார் மூலமாகக் கம்பராமாயணப் பாடல்களைக் கேட்டு மனனம் செய்தவர் அவர். பின்னாளில் அவர் எழுதிய ‘கவிச் சக்கரவர்த்தி’ நாடகத்தை “என் சிறுவயதிலேயே எனக்குக் கம்பர் கவிதைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லி அவற்றில் நான் ஈடுபாடு கொள்ளும்படி செய்த என் அன்னைக்கு” எனச் சமர்ப்பணம் செய்துள்ளார். “குழந்தைகளை அடிக்க மாட்டேன், கம்பராமாயணத்தின் மீது சத்தியம்” என்று தம் நாட்குறிப்பில் எழுதியிருந்தார்.

கம்பராமாயணத்தின் ஐந்து காண்டங்களை அவர் பதிப்பித்துள்ளார். ‘கவிச் சக்கரவர்த்தி’ என்னும் நாடக நூலையும் எழுதினார். கு.அழகிரிசாமிக்குச் சிறுவயதில் தொடங்கிய கம்பராமாயண ஈடுபாடு வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது. இவ்வாறு கம்பராமாயணத்தில் பற்றுக் கொண்ட கு.அழகிரிசாமி அதை எரிக்க வேண்டும் என்று பேசிய ‘வெங்குப் பிள்ளை கூட்ட’த்திற்குச் செய்த எதிர்வினைதான் இக்கதை.

கதையை எழுதியபோது கு.அழகிரிசாமிக்கு இருபத்தொரு வயது. 28.07.1936 அன்று இறந்த தம் தாயாரின் மறைவுக்குப் பெரியார் எழுதிய இரங்கல் கட்டுரை 02.08.1936 அன்று ‘குடியரசு’ நாளிதழில் வெளியாயிற்று. அப்போது கு.அழகிரிசாமிக்குப் பதின்மூன்று வயது. அப்போதே பெரியாரின் கட்டுரையைக் கு.அழகிரிசாமி

வாசித்திருக்கக்கூடும். பின்னர் பத்திரிகைத் துறை வேலைக்கு வந்த பிறகு வாசித்திருக்கலாம்.

பெரியாரின் எழுத்துக்கள் அப்போது சிறு சிறு நூல்களாக வெளியாயின. அவற்றில் இக்கட்டுரையும் இருந்திருக்கலாம். மேலும் பெரியார் எழுதியவற்றில் அது பலரும் நன்றாக அறிந்திருந்த கட்டுரை. ஆகவே, அவர் வாசிப்புக்கு எப்படியோ அக்கட்டுரை வந்திருக்கக் கூடும். கம்பராமாயண எரிப்புப் பிரச்சினை பரவலானபோது நேரடியாக இல்லாமல், கதை வடிவில், பெரியாரின் தந்தை பெயரை வைத்துத் தம் எதிர்வினையை அவர் ஆற்றியிருக்கிறார். அந்த அளவு கம்பராமாயண ஈடுபாட்டாளர் கு.அழகிரிசாமி.

பயன்பட்ட நூல்கள்:

1. *பழ.அதியமான் (ப.ஆ.), கு.அழகிரிசாமி சிறுகதைகள், 2011, நாகர்கோவில், காலச்சுவடு பதிப்பகம்.*
2. *வே.ஆனைமுத்து (ப.ஆ.), ஈ.வெ.ரா. பெரியார் சிந்தனைகள், தொகுதி 3, 1974, திருச்சிராப்பள்ளி, சிந்தனையாளர் கழகம்.*
3. *அண்ணாதுரை, தீ பரவட்டும், 1953, சென்னை, கலை மன்றம், நான்காம் பதிப்பு.*
4. *சி.என்.அண்ணாதுரை, கம்பரசம், 1947, திருச்சிராப்பள்ளி, திராவிடப்பண்ணை.*

கு.அழகிரிசாமி

https://www.sirukathaigal.com/%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D/%E0%AE%95%E0%AF%81-%E0%AE%85%E0%AE%B4%E0%AE%95%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF/

]

கு. அழகிரிசாமி (செப்டம்பர் 23, 1923 – சூலை 5, 1970) குறிப்பிடத்தக்க தமிழ் எழுத்தாளர். 20-ஆம் நூற்றாண்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளராகத்

திகழ்ந்த அழகிரிசாமி, சிறுகதை, கட்டுரை, புதினங்கள், நாடகங்கள், மேடை நாடகங்கள், கவிதைகள், கீர்த்தனைகள், மொழிபெயர்ப்புகள் என்று பல துறைகளில் சாதனை புரிந்துள்ளார்.

இவர் எழுத்தாளர் கி. ராஜநாராயணின் இளமைக் கால நண்பர்.[1] தமிழ் நேசன் (மலேசியா), சக்தி, சோவியத் நாடு, பிரசண்ட விகடன் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றினார்.இலக்கிய உலகில் இவரது சிறுகதைகள் புகழ்பெற்றவை. 1970 இல், இவரது அன்பளிப்பு என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது.

அழகிரிசாமி திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டிக்கும் கயத்தாறுக்கும் இடையில் இடைசெவல் என்னும் சிற்றூரில், குருசாமி-தாயம்மாள் ஆகியோருக்கு முதல் மகனாகப் பிறந்தார். பரம்பரையாக வீட்டில் தெலுங்கு பேசுபவர்கள் அழகிரிசாமியின் குடும்பத்தார். ஆனால் வெளியே பேசும்போது தமிழில்தான் பேசுவார் அழகிரிசாமி.

வசதியின்மை காரணமாக அவரை நான்காவது வரைகூட படிக்க வைக்க அவரது பெற்றோரால் முடியவில்லை. ஆனால், விடாமுயற்சியுடன் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து முடித்தார். அந்தச் சிற்றூரில் எஸ்.எஸ்.எல்.சி வரை படித்தவர் என்ற “பெருமை’ அவருக்கு உண்டு. பள்ளிப் படிப்பைவிட அவர் அனுபவத்தில் பெற்ற அறிவே அதிகம்.

’உறக்கம் கொள்ளுமா?’ என்ற இவரது முதல் சிறுகதை 1943-ஆம் ஆண்டு “ஆனந்த போதினி’ மாத இதழில் பிரசுரமானது.

ரஷ்ய எழுத்தாளர் கார்க்கியின் எழுத்து அவரை மிகவும் கவர்ந்தது. கார்க்கியின் நூலை முதன் முதலில் தமிழாக்கம் செய்தவர் இவர்தான். தமிழ் இலக்கியங்களுடன் மேல்நாட்டு இலக்கியங்களையும் படித்தார். பழைய பாடல்களுக்கு உரை எழுதும் ஆற்றலையும் வளர்த்துக்கொண்டார்.

அரசுப் பணியில் சேரத் தேர்வு பெற்றதால், சார்பதிவாளர் அலுவலகத்தில் முப்பத்தைந்து ரூபாய் சம்பளத்தில் எழுத்தர் உத்தியோகம் கிடைத்தது. ஆனால், நாள்தோறும் பத்திரங்களைப் பதிவது அவருக்குப் பிடிக்கவில்லை. அந்த எழுத்தர் உத்தியோகத்தில் மனநிறைவு ஏற்படவில்லை. அதனால் சென்னைக்கு வந்து, முதல் கதையை வெளியிட்ட “ஆனந்த போதினி’ பத்திரிகை அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தார்.

“ஆனந்த போதினி’, “பிரசண்ட விகடன்’ ஆசிரியராக இருந்த மூத்த எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன் அழகிரிசாமியின் எழுத்தாற்றலைப் புரிந்து கொண்டு, அவருக்கு உதவி ஆசிரியர் பணியைத் தந்தார்.

“பிரசண்ட விகடனி’ல் வெளிவந்த அவரது கதைகளை சமகால எழுத்தாளர்களான வல்லிக்கண்ணனும், புதுமைப்பித்தனும், தொ.மு.சி.ரகுநாதனும் பாராட்டினார்கள். பிரசண்ட விகடன் பத்திரிகை அலுவலகத்தை விட்டுவிட்டு “தமிழ்மணி’ என்ற அரசியல் வார இதழில் சேர்ந்தார்.

“தமிழ்மணி’ வார இதழில் அவர் சில காலம்தான் பணியாற்றினார். அதன் பிறகு வை.கோவிந்தன் வெளியிட்ட “சக்தி’ மாத இதழில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். அதன் ஆசிரியராக இருந்தவர் தி. ஜ. ரங்கநாதன். கு.அழகிரிசாமியின் முற்போக்குச் சிந்தனையையும், ஆற்றலையும் கண்டுகொண்ட வை.கோவிந்தன், அழகிரிசாமிக்கு சக்தி இதழிலும் பதிப்பகத்திலும் இடமளித்து, எழுதுவதற்கு வாய்ப்பளித்தார்.

அழகிரிசாமியின் முயற்சியால் வெளியான கம்பராமாயணம், காவடிச் சிந்து ஆகிய பதிப்புகள் அவருடைய ஆராய்ச்சித் திறனையும் மொழியாக்க ஆற்றலையும் வெளி உலகுக்குத் தெரியப்படுத்தின.

“ராஜா வந்திருக்கிறார்’ என்ற அவரது கதை இந்திய மொழிகளிலும், ரஷ்ய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த கதை.

“சக்தி’ இதழில் பணியாற்றிய பிறகு ஐந்தாண்டுகள் மலேசியா (1952-1957) சென்றார். அந்தக் காலம் அவர் வாழ்க்கையின் பெரும் திருப்புமுனை எனலாம். 1955-ஆம் ஆண்டு கு.அழகிரிசாமிக்கும், சீதாலட்சுமிக்கும் மலேசியாவில் திருமணம் நடைபெற்றது. மலேசிய வானொலியில் முக்கூடல் பள்ளு இசை நாடகத்துக்குப் பாடியவர்களில் ஒருவர் சீதாலட்சுமி.

மலேசியாவில் இருந்து மீண்டும் தமிழகம் வந்ததற்கு ”மலேசிய நாட்டில் தன்னுடைய இலக்கிய வாழ்க்கைக்கு உற்ற நண்பர்கள் இல்லை என்பதாலும், தமிழ் நாட்டு அன்பர்களை விட்டுப் பிரிந்திருக்க மனமில்லாததாலும் நான் மலேசியா நாட்டை விட்டு தமிழ்நாட்டுக்குத் திரும்பினேன்” என்று அழகிரிசாமி காரணம் கூறினார். மேலும் “தமிழ்நேசன்’ நாளிதழ் அலுவலகத்திலும் வெளியே அரசியல்வாதிகள்

சில்ரின் ஒத்துழையாமையும் அவருக்கு ஆசிரியர் பணியில் சோர்வை ஏற்படுத்தின.

1957-ஆம் ஆண்டு சென்னை திரும்பிய அவர், 1960-ஆம் ஆண்டு வரை காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். பிறகு "நவசக்தி' நாளிதழில் 1965 வரை பணியில் இருந்தார். "நவசக்தி' இதழில் இருந்த காலத்தில்தான் அவர் "கவிச்சக்ரவர்த்தி' என்ற வரலாற்று நாடகத்தை எழுதினார். அந்த நாடகம் அவருக்குப் பெயரையும் புகழையும் பெற்றுத்தந்தது.

"நவசக்தி' நாளிதழ் பணியிலிருந்து விலகி, ஐந்தாண்டுகள் சுதந்திர எழுத்தாளராக இருந்தார். கடிதம் எழுதுவதை அவர் கடமையாகக் கொண்டிருந்தார். அவ்வாறு அவர் எழுதிய கடிதங்களை கி.ராஜநாராயணன் தொகுத்து, "கு.அழகிரிசாமி கடிதங்கள்' என்ற நூல் வெளிவந்துள்ளது. கு.அழகிரிசாமியின் சிறுகதைகள் ஒன்பது தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

இறுதியாக "சோவியத் நாடு' ஆசிரியர் குழுவில் சேர்ந்தார். ஆனால், உடல்நிலை காரணமாக அவரால் முழுமையாக அந்தப் பணியில் தொடர முடியவில்லை.

படைப்புகள்

புதினங்கள்

- டாக்டர் அனுராதா
- தீராத விளையாட்டு
- புது வீடு புது உலகம்
- வாழ்க்கைப் பாதை

சிறுவர் இலக்கியம்

- மூன்று பிள்ளைகள்
- காளிவரம்

மொழிபெயர்ப்புகள்

- மாக்சிம் கார்க்கியின் நூல்கள்
- லெனினுடன் சில நாட்கள்
- அமெரிக்காவிலே
- யுத்தம் வேண்டும்

- விரோதி
- பணியவிட்டால்

நாடகங்கள்

- வஞ்ச மகள்
- கவிச்சக்கரவர்த்தி

சிறுகதைத் தொகுப்புகள்

- அன்பளிப்பு
- சிரிக்கவில்லை
- தவப்பயன்
- வரப்பிரசாதம்
- கவியும் காதலும்
- செவிசாய்க்க ஒருவன்
- புதிய ரோஜா
- துறவு

கட்டுரைத் தொகுப்பு

- இலக்கியத்தேன்
- தமிழ் தந்த கவியின்பம்
- தமிழ் தந்த கவிச்செல்வம்
- நான் கண்ட எழுத்தாளர்கள்

கு.அழகிரிசாமி ஆவணப்படம் காணொளி

Kolakkaal Thirigai - A Documentary on Ku. Alagirisamy

https://www.youtube.com/watch?v=Ef5VprkWqxo [1:23:44]

Kolakkaal Thirigai - A Documentary (Tamil, 83 mins) on Ku. Alagirisamy (1923-1970), renowned Tamil writer. He was awarded the Sahitya Academy Award in 1970 for the best Short Story Writer posthumously.

கு.அழகிரிசாமியின் எழுத்துக்கள்

| Ku.Azhagirisamy Eluthukal |

ஆய்வரங்கு | இலக்கியவெளிடிவி

https://www.youtube.com/watch?v=-UD8yya_Wvo [3:32:52]

அழகிரிசாமியின் ராஜா

https://www.jeyamohan.in/9207/

மெய்ஞானத்தையும் கனிந்த விவேகத்தையும் குழந்தைகளைக்கொண்டு சொல்லவைக்கும்போக்கு இந்திய இலக்கியத்தில் உண்டு. குழந்தையும் தெய்வமும் ஒன்று என்ற எண்ணத்தின் விளைவு அது. குழந்தை மனிதர்களின் கசடுகள் தீண்டாமல் கடவுளின் கையில் இருக்கிறது என்ற நம்பிக்கை உலகமெங்கும் உள்ளது. தேவதைகளை குழந்தைகளாக உருவகித்தது மேலைமரபு. தெய்வங்களேகூட குழந்தை வடிவில் வழிபடப்பட்டன. குழந்தை ஏசு ஐரோப்பாவெங்கும் பிரபலம். குருவாயூர் கிருஷ்ணனும் உடுப்பி கிருஷ்ணனும் கைக்குழந்தைகள். முருகன் அழகிய சிறுவன்.

அழகிரிசாமியின் இந்தக்கதையில் அபாரமான ஒரு மெய்ஞானம் குழந்தைவாயில் இருந்து வருகிறது. ஆனால் அதற்காக ஆசிரியர் எந்த முயற்சியும் செய்யவில்லை. சற்றும் செயற்கைத்தன்மை இல்லை. சர்வசாதாரணமான சித்தரிப்பு மிக எளிதாக அந்த உச்சத்தில் ஏறி அமர்ந்துகொள்கிறது- தவழும் குழந்தை தும்பியாக மாறி பறக்க ஆரம்பிப்பதுபோல ஒரு அற்புதம். என்னுடைய இலக்கிய முன்னோடிகள் வரிசை விமர்சனநூல்களில் தமிழில் எழுதப்பட்ட மிகச்சிறந்த எட்டு கதைகளின் வரிசையில் இக்கதையையும் சேர்த்திருக்கிறேன்.

இக்கதையில் உள்ள தடையற்ற ஒழுக்கு, நலுங்காத இயல்புத்தன்மை, தானாகவே பார்த்துச்சிரித்து கைநீட்டி ஒக்கலில் ஏறிக்கொள்ளும் குழந்தைபோல ஆசிரியனிடம் கூடும் மெய்ஞானம் ஆகியவையே அழகிரிசாமியின் தனித்தன்மைகள்.

Bala Baskaran

about tamil and the tamils

https://balabaskaran24.blogspot.com/2011/01/blog-post.html

SUNDAY, JANUARY 23, 2011

கு அழகிரிசாமியும் மலாயாத் தமிழ் எழுத்தாளர்களும்

கு அழகிரிசாமி (23 செப்டம்பர் 1923 - 5 ஜூலை 1970) சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், கட்டுரை எனப் பல வடிவங்களிலும் தேர்ச்சி பெற்ற ஓர் எழுத்தாளர். இசையில் அபார ஈடுபாடும் முறையான பயிற்சியும் கொண்டவர். இடைக்காலப் பிரபந்த இலக்கியங்களில் மிகுந்த ரசனை வாய்ந்தவர். அவர் ஒரு கட்டத்தில் மலாயாவில் **தமிழ் நேசன்** பத்திரிகையில் பணியாற்றியவர் என்பதைத் தமிழுலகம் நன்கு அறியும்.

1952ல் நேசன் உரிமையாளர் மலையாண்டி செட்டியார் தமிழ்நாட்டிலிருந்து ரா வேங்கடராஜுலு நாயுடுவையும் கு அழகிரிசாமியையும் கோலாலம்பூருக்குக் கொண்டு வந்தார். பழுத்த பத்திரிகை அனுபவம் வாய்ந்த நாயுடு நேசனின் பிரதம ஆசிரியர். இலக்கியப் படைப்பாளி கு.அ முக்கியமாகக் கதைகளைத் தாங்கி வந்த நேசன் ஞாயிறு மலரின் பொறுப்பாளர். நாயுடு 1953ல் எலிசபெத் அரசியாரின் முடிசூட்டு விழாவைக் காண மலாயாப் பத்திரிகையாளர்களுடன் லண்டன் சென்று வந்தார். உடல் நலம் காரணமாக நாயுடு நேசனைவிட்டுப் போக நேர்ந்தபோது எழுத்தாளர் கு. அழகிரிசாமி ஆசிரியர் பொறுப்பையும் சேர்த்துப் பார்த்துக்கொண்டார்.

மலாயா, சிங்கப்பூர்த் தமிழ்த் தினசரியில் இந்த அளவுக்குப் பிரபலமான, திறமையான தமிழ்நாட்டு எழுத்தாளர் ஒருவர் பணியாற்ற வந்து சேர்ந்தது இதுவே முதன் முறை. இதுவே கடைசி முறையும் கூட.

முப்பது வயதில் கோலாலம்பூர் வந்த கு.அ அன்றைய மலாயாத் தமிழ் எழுத்துலகில் இனிய தென்றலாக வீசி எழுத்தாளர்கள் பலரை அன்பாலும் அரிய பண்பாலும் கவர்ந்தவர். ஏன், வசியப்படுத்தியவர் என்றுகூடச் சொல்லலாம். அவருடைய மந்திரச் சொல்லிலும் ஆளுமையிலும் கட்டுண்டு கிடந்தனர் இங்குள்ள எழுத்தாளர்கள். சி. கமலநாதன், எஸ். வி. சுப்பிரமணியன், சி. வடிவேல் போன்றவர்கள் அழகிரிசாமியையும் அவர் நடத்திய அபூர்வமான **இலக்கிய வட்டம்** எழுத்துப் பயிற்சியையும் ஆதங்கத்தோடு நினைவுகூர்ந்து பேசியதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். அதிலும் சி. கமலநாதன் அழகிரிசாமியை கிட்டத்தட்ட ஒரு கலைத் தெய்வமாகவே வணங்கினார் எனலாம்.

வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே இருக்கும் அழகிரிசாமிக்கு டொரியான் பழம் என்றால் உயிர். வந்த சில ஆண்டுகள் கழித்து இங்கேயே ஒரு பிராமணப் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். **குற்றாலக் குறவஞ்சி**, **முக்கூடற்பள்ளு** போன்ற பிரபந்தங்களைத் திருச்செந்தூர் சகோதரிகள் கோலாலம்பூரில் மேடையேற்றியபோதும் வானொலியில் படைத்தபோதும் அவற்றுக்கு இசைவகுத்துக் கொடுத்து உதவியவர் கு.அ. அப்பொழுது ஏற்பட்ட காதல் கலப்புத் திருமணத்தில் முடிந்தது.

தமிழ் நேசன் வேலையும் அழகிரிசாமிக்கு அலுத்துவிட்டது. மலாயாவின் இலக்கியச் சூழ்நிலையும் அவருக்கு உகந்ததாக இல்லை. இப்படி சொல்லிவிட்டுத்தான் ஐந்தாண்டு வாசத்திற்குப் பிறகு 1957ஆம் ஆண்டு இறுதியில் குடும்பத்தோடு சென்னைக்குத் திரும்பினார் கு.அ. அவருடைய இலக்கிய தாகத்திற்குத் **தமிழ் நேசன்** வேலை தகுந்த தீனி போடுவதாக இல்லை எனலாம்.

இங்கிருந்தபோது மலாயா எழுத்தாளர்களைப் பற்றி அவர் அவ்வளவு உயர்ந்த எண்ணம் கொண்டிருக்கவில்லை. யாரும் புண்படாத வண்ணம் இதை வெளியில் சொல்லவும் அவர் தயங்கியதில்லை.

'நீங்களெல்லாம் ஏன் ஐயா சிறுகதை இலக்கணம் தெரியாமலேயே கதை எழுத வந்துவிட்டீர்கள்' என்பார் ஓர் ஆரம்ப எழுத்தாளரிடம், மனச்சோர்வுடன் திரும்பிச்

செல்வார் புதிய எழுத்தாளர். ஆனால் மறு வாரமே அவருடைய கதை திருத்தங்களுடன் ஞாயிறு மலரில் வரும்' என்று எழுத்தாளர் **எஸ். வி. சுப்பிரமணியன்** ஒரு கட்டுரையில் நினைவுகூர்கிறார்.

மாறாக, சென்னைக்குப்போய் மூன்றாண்டுகள் கழித்து **சரஸ்வதி** இதழில் எழுதிய **மலாயாத் தமிழ் எழுத்தாளர்கள்** கட்டுரையில் அவர்களைத் தாராளமாகவே புகழ்ந்து தள்ளினார். இது அவருடைய விசித்திரமான போக்கு என்பதை அக்காலத்திய முக்கிய எழுத்தாளர்கள் சிலர் கூறக் கேட்டிருக்கிறேன். 1960 நவம்பர் மாதம், மலர் 7 இதழ் 5ல் வெளியான நான்கு பக்கக் கட்டுரையை இங்கே தருகிறேன். நம் தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் படித்துச் சுவைக்கவேண்டிய வரலாற்றுத் துளி. இந்தக் கட்டுரை இல்லாமல் சிறுகதை வரலாறு இல்லை.

ஐம்பதுகளில் எழுத்தாளர் என்றால் பெரும்பாலும் சிறுகதை எழுத்தாளர்கள்தாம். அவர்களையே கு.அ. முதன்மைப்படுத்தி எழுதுவதையும் கவனிக்க வேண்டும்.

மலாயாவில் தமிழ் எழுத்தாளர்கள்

கு. அழகிரிசாமி

மலாயாவில் நாற்பது அல்லது ஐம்பது பேர் எழுதிய ஒரு கதையோ அல்லது சில கதைகளோ அந்நாட்டின் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கும். அவ்வாறு எழுதியிருப்பவர்களில் சுமார் இருபது பேர் குறிப்பிடத்தக்கவர்கள்; தமிழ் எழுத்தாளர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லவேண்டியவர்கள். இந்த இருபது பேரும் மொத்தம் முந்நூறு கதைகளாவது எழுதியிருப்பார்கள் என்று தோன்றுகிறது.

இருபது எழுத்தாளர்கள் என்பது பெரிய எண்ணிக்கையா, சிறு தொகையா என்பதை அந்நாட்டின் நிலைமைகளைக் கொண்டுதான் சொல்லவேண்டும். நான் அதைப் பெரிய எண்ணிக்கையாகவே கருதுகிறேன். மலாயாவில் இருபது எழுத்தாளர்கள் இருப்பது, தமிழ்நாட்டில் இரண்டாயிரம் எழுத்தாளர்கள் இருப்பதற்குக் சமம் என்றே சொல்லிவிடலாம்.

மலாயாவில் சுமார் ஆறு லட்சம் தமிழர்கள் வசிக்கிறார்கள். சுமார் ஆயிரம் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவற்றில்

பெரும்பாலானவை ரப்பர்த் தோட்டங்களில் தொழிலாளர்களின் குடியிருப்புக்கு நடுவே நான்கு வகுப்புக்களோடும், ஐம்பது மாணவர்களோடும், ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்களோடும் நடைபெற்று வருபவையாகும்.

எந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடத்திலும் ஆறாம் வகுப்புக்கு மேல் கிடையாது. ஏழாம் வகுப்பை வீட்டிலிருந்து படித்துத் தேறுவது உண்டு. அதற்குமேல் தமிழுக்கு வாய்ப்பில்லை. *(சமீபத்தில் தமிழ்க் கல்விக்கு சர்வகலாசாலை வரையில் ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது.)* ஏழாம் வகுப்பில் தேறினால் வாத்தியார் வேலைக்கு மட்டுமே போக முடியும். அந்தப் படிப்புக்கு வேறு எந்த உத்தியோகமும் கிடைக்காது. அதனால் இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு வசதியுள்ளவர்கள் தங்கள் குழந்தைகளை அனுப்புவதில்லை. அந்தக் குழந்தைகள் முதல் வகுப்பிலிருந்தே ஆங்கிலப் பாடசாலைகளில் படித்து – சிலர் தமிழை எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ளாமலேயே – சீனியர் வகுப்புக்குத் தேறியதும் உத்தியோகத்துக்கு வந்து விடுகிறார்கள். வசதியுள்ளவர்களில் தாய்மொழிப் பற்றுள்ளவர்களும் உண்டு. அவர்கள் மட்டும் தங்கள் பிள்ளைகளை முற்பகலில் ஆங்கிலப் பாடசாலைக்கும் பிற்பகலில் தமிழ்ப் பாடசாலைக்கும் அனுப்பி வைப்பார்கள். பெரிய உத்தியோகங்களை அடைவதற்குத் தமிழ்ப் படிப்பு உதவி செய்யாது என்ற நிலையில், அதற்கு அந்தஸ்து இல்லாமல் போய்விட்டது. ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் இல்லாத ரப்பர்த் தோட்டங்களில், தொழிலாளிகளின் குழந்தைகள் வேறு வழியில்லாமல் தமிழ்ப்

பள்ளிக்கூடங்களுக்குப் போவார்கள். நகரங்களில் பெரும்பாலும் ஏழைக் குழந்தைகளே தமிழ்ப் பள்ளிக்குப் போவார்கள். அந்தஸ்து பெறாத தமிழ்க் கல்வியின் தரமும் அதைக் கற்பிக்கும் பள்ளிகளின் நிலை எப்படி இருக்கும் என்பதை யூகிப்பது சிரமமல்ல.

அநேக தோட்டப் பள்ளிக்கூடங்கள் மாட்டுத் தொழுக்களைப் போலவே காட்சியளிக்கும். அவ்வளவு சிறிய கட்டடங்கள். இப்படிப்பட்ட பள்ளிகளில் படித்து ஏழாம் வகுப்புத் தேறியவர்களே மலாயாவின் தமிழ் எழுத்தாளர்களில் பாதிக்கும் அதிகமானவர்கள். ஏழாம் வகுப்போடு முடியும் அரைகுறைத் தமிழ்க் கல்வியைப் பயின்று, அருமையான சிறுகதைகளைப் படைக்கும் திறனைச் சுயமுயற்சியினால் தேடிக்கொண்ட எழுத்தாளர்கள் பத்துப் பேருக்கு மேலேயே அந்நாட்டில் இருக்கிறார்கள். மலாயாத் தமிழ் எழுத்தாளர்கள் பெருமைப்படவேண்டிய விஷயம் இது. நாட்டின் கல்வி நிலையைப் பார்க்கும்போது, இருபது எழுத்தாளர்கள் என்பது மிகப் பெரிய தொகை என்பதை இப்போது கண்டுகொள்ளலாம்.

மலாயாவில் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள் தோன்றியது சுமார் பத்து வருஷங்களுக்கு முன்புதான். அதற்கு முன்னதாக இரண்டொருவர் கதை கட்டுரைகள் எழுதியிருக்கக்கூடும். ஆனால் பொதுப்படையாகச் சொல்வது என்றால், கடந்த பத்து வருஷ காலமாகவே அந்நாட்டில் தமிழ் இளைஞர்கள் கதைகள் எழுதி வருகிறார்கள் என்று சொல்ல வேண்டும். கதைகளை வெளியிடுவதற்கு இரண்டு பெரிய தினசரிப் பத்திரிகைகள் இருக்கின்றன. ஒன்று, மலாயாவின் தலைநகராகிய

கோலாலம்பூரிலிருந்து வெளிவரும் **தமிழ் நேசன்**, மற்றொன்று சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் **தமிழ் முரசு**. இந்த இரண்டு பத்திரிகைகளும் தொடங்கப்பெற்று முறையே சுமார் 35 வருஷங்களும் 25 வருஷங்களும் ஆகின்றன. இவை போக, வாரப் பத்திரிகைகளும் மாதப் பத்திரிகைகளும் சிறுகதைகளை வெளியிட்டு வருகின்றன.

பத்து வருஷங்களுக்குமுன் மலேயாவில் சிறுகதை எழுத்தாளர்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் **தமிழ் நேசன்** பத்திரிகையில் திரு சுப. நாராயணன், திரு பைரோஜி நாராயணன் என்ற இருவரும் **கதை வகுப்பு** என்ற ஒரு பகுதியை நடத்தி வந்தார்கள். *(இந்த வகுப்பு இதே பெயரிலோ வேறொரு பெயரிலோ தமிழ் முரசிலும் பிறகு நடைபெற்றதாகக் கேள்விப்பட்டேன்.)* பலரையும் எழுதச் சொல்லி, அவர்களுடைய எழுத்துக்களைப் பிரசுரித்து அவற்றிலுள்ள குறை நிறைகளைப் பத்திரிகையிலேயே சுட்டிக் காட்டி விமர்சனம் செய்து வந்தார்கள். கதை வகுப்பு சுமார் ஒரு வருஷம் நடந்து வந்தது. அந்த வகுப்பில் கலந்து கொண்டவர்களும் கலந்து கொள்ளாமல் அதைப் படித்து வந்தவர்களும் பலர். எல்லோருக்குமே கதை வகுப்பு ஒரு தூண்டுகோலாக, பால பாடமாக இருந்து உதவியது. அநேகர் கதைகளை எழுதிக் குவிக்கலாயினர். அவர்களில் கடும் உழைப்பாலும், புத்திக் கூர்மையாலும் நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று வந்தவர்கள் இருபது பேராவது இருப்பார்கள். இந்த இருபது பேரிலும் நாலைந்து பேருடைய எழுத்துக்கள் ஏதாவது ஒரு

அம்சத்தில் பாராட்டத்தக்கவாறு இருந்தன. மற்றவர்கள் அந்த அளவுக்கு வளர்ச்சி பெறவில்லை என்றாலும் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். இது **கதை வகுப்பு** முடிந்து இரண்டு வருஷங்களுக்குப் பிறகு இருந்த நிலை. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் -1952ல்- நான் மலாயாவுக்குப் போய்ச் சேர்ந்தேன். **தமிழ் நேசன்** பத்திரிகையின் ஞாயிறு பதிப்பைத் தயாரிக்கும் முழுப் பொறுப்பும் என்னுடையதாயிற்று. **'இந்நாட்டு எழுத்தாளர்கள் எழுதியனுப்பிய சிறுகதைகள்'** என்று நூறு நூற்றைம்பது கதைகளைக் கொண்ட ஒரு கட்டு என்னிடம் கொடுக்கப்பட்டபோது என்னால் நம்ப முடியவில்லை. இந்நாட்டில் கதை எழுதக்கூடியவர்கள் இத்தனை பேர் இருக்கிறார்களா என்று நான் ஆச்சரியப்பட்டேன்.

நான் மலாயாவில் போய் இறங்கியபோது, அங்கே கதை எழுதுகிறவர் என்று ஒருவர் இருப்பார் என்றே நான் நினைக்கவில்லை. எதிர்பாராத ஆச்சரியத்துடனும், மகிழ்ச்சியுடனும் கதைக் கட்டைப் பிரித்து வாசிக்க ஆரம்பித்தேன். நூற்றைம்பது கதைகளில் ஐந்தாறைப் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுத்தேன் பிறவற்றைத் தள்ளிவிட்டேன். அதிலிருந்து வாராவாரம் மலாயாத் தமிழ் எழுத்தாளர்களின் கதைகளை வெளியிட்டு வந்தேன். என்னால் முடிந்த வழியிலெல்லாம் அவர்களுக்குப் பத்திரிகை வாயிலாகவும், நேரிலும் உற்சாகமூட்டி வந்தேன். நான்கு வருஷ காலத்துக்குப் பிறகு சுமார் இருபது பேர் சிறந்த எழுத்தாளர்கள் ஆவதற்குரிய திறமை படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்று எனக்குத்

தோன்றியது. அவர்களுக்குத் திரும்பவும் ஒரு கதை வகுப்பு நடத்த வேண்டியது அவசியம் என்பதையும் உணர்ந்தேன்.

எல்லா எழுத்தாளர்களையும் ஓரிடத்தில் மாதத்திற்கு ஒரு முறை கூடும்படி செய்து கதை வகுப்பு நடத்தினால் அநேக குறைகளைக் களைந்துவிடலாம் என்று கருதினேன். இந்த அபிப்பிராயத்தை ஒருநாள் **ஸ்ரீ கி. மூர்த்தி** என்ற அன்பரிடம் தெரிவித்தேன். அவர் ரெயில்வேயில் பெரிய உத்தியோகம் வகிப்பவர். இலக்கியத்தில் அபாரமான ஈடுபாடு உடையவர். மலாயாவில் அவரைப்போல் புத்தகங்களை வாங்கிக் குவித்து, மேல்நாட்டு இலக்கியங்களையும் தமிழ் இலக்கியங்களையும் நாள் தவறாமல் படித்துக் கொண்டிருப்பவர்களை நான் பார்க்கவில்லை. கி. மூர்த்தி இரண்டொரு கதைகளும் எழுதியிருக்கிறார்கள். என் அபிப்பிராயத்தைக் கேட்டதும் அவர் மிகுந்த சந்தோஷம் அடைந்து ஒவ்வொரு மாதமும் கடைசிச் சனிக்கிழமையன்று பிற்பகலில் தம் இல்லத்திலேயே மலாயாவின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கும் எழுத்தாளர்களை வரவழைத்து **இலக்கிய வட்டம்** என்ற பெயருடன் சிறுகதை வகுப்பு நடத்துவதற்கு ஆதரவளிக்க முன்வந்தார். மறுநாளே எல்லா எழுத்தாளர்களுக்கும் அழைப்பு அனுப்பினார்.

முதல் கூட்டம் 1957 ஜனவரி கடைசிச் சனிக்கிழமையன்று அவர் வீட்டில் நடந்ததாக ஞாபகம். சுமார் 30 எழுத்தாளர்கள் வந்திருந்தார்கள். சிலர் நூறு மைலுக்கு அப்பாலுள்ள ஊர்களிலிருந்தும் ரப்பர்த் தோட்டங்களிலிருந்தும் வந்திருந்தார்கள்.

சிறுகதையின் லட்சணங்களைப் பற்றிய ஒரு சொற்பொழிவு அன்று நடைபெற்றது. அடுத்த மாதம் கடைசி சனிக்கிழமையன்று நடந்த கூட்டத்தில் ஓ ஹென்றியின் கதையொன்று வாசிக்கப்பட்டு எல்லோராலும் விமர்சிக்கப்பட்டது. மற்றொரு மாதம் சிதம்பரம் சுப்ரமணியம் எழுதிய ஒரு சிறந்த கதையைப் பற்றிய விமர்சனம் நடந்தது. நல்ல சிறுகதைக்கு இருக்க வேண்டிய லட்சணங்கள், இருக்கக்கூடாத விஷயங்கள் எவை எவை என்பதை ஒவ்வொருவரும் தாமாக உணரத் தொடங்கினார்கள். பிறகு, மலாயா எழுத்தாளர்களின் கதைகளையே விமர்சிப்பது என்று தீர்மானித்தோம். மறுபடியும் கூட்டத்துக்கு வருவதற்குமுன் ஒவ்வொரு எழுத்தாளரும் ஒவ்வொரு சிறுகதையை எழுதியனுப்ப வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

அவ்வண்ணமே பல கதைகள் வந்தன. அவற்றில் இரண்டைத் தேர்ந்தெடுத்து, கூட்டத்தில் வாசித்தோம். வந்திருந்த முப்பது எழுத்தாளர்களும் விமர்சனத்திலும் விவாதத்திலும் பங்கெடுத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு வாக்கியமுமே அலசி ஆராயப்பட்டது. வேண்டாத வளர்த்தல்கள், மேலும் விரிவாக எழுதப்படவேண்டிய கட்டங்கள், பாத்திர சிருஷ்டியின் குறை நிறைகள், அர்த்தமற்ற அடுக்குச் சொற்கள், விஷயத்தின் கௌரவத்தைக் கெடுக்கும் பாஷை நடை, எழுத்துப் பிழைகள் முதலிய எத்தனையோ விஷயங்களை ஒவ்வொருவரும் தெள்ளத் தெளிவாகக் கண்டுகொள்ளத் தொடங்கினார்கள்.

கடைசிக் கூட்டம் 1957 அக்டோபர் 5ஆம் தேதி நடைபெற்றது. 19ஆம் தேதி நான் இந்தியாவுக்குக் கப்பல் ஏறினேன்.

மொத்தம் பத்து மாதங்களில் பத்து கூட்டங்கள் நடந்து முடிந்தன. இந்தப் பத்துக் கூட்டங்களுக்குப் பிறகு எழுத்தாளர்கள் எழுதிய கதைகளைப் பார்த்தபோது அவர்கள் அடைந்த அபார வளர்ச்சி தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. இந்தக் கதை வகுப்பில் ஆசிரியர் என்று யாரும் கிடையாது. நான் உள்பட எல்லோருமே ஆசிரியர்களாகவும், அதே சமயத்தில் மாணவர்களாகவும் இருந்தோம். மலாயாவின் தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களைப் பற்றி இன்று பேசினாலும், தமிழ் நேசனில் நடந்த கதை வகுப்பையும் கி.மூர்த்தி வீட்டில் நடைபெற்ற பத்து விமர்சனக் கூட்டங்களையும் குறிப்பிடாமல் தீராது. கதை வகுப்பு இளைஞர்களை எழுதத் தூண்டியது. விமர்சனக் கூட்டமோ அவர்களை எழுத்தாளர்களாக்கி விட்டது.

வகுப்பு நடைபெற்று வந்தபோது எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கு மற்றொரு வாய்ப்பும் கிட்டியது. அந்நாட்டிலுள்ள **தமிழ்ப் பண்ணை** ஸ்தாபனத்தார் அந்த வருஷத்தில் வருஷாந்தர விழா நடத்த ஏற்பாடு செய்து, கட்டுரைப் போட்டி நடத்தும் பொறுப்பை என்னிடம் ஒப்படைக்க வந்தனர். நான், ‘கட்டுரைப் போட்டி வேண்டாம். சிறுகதைப் போட்டி நடத்துவோம். பரிசுகளாகப் புத்தகங்களைக் கொடுக்காமல் தங்கப் பதக்கங்களைக் கொடுப்போம்’ என்றேன். அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். அப்படியே போட்டி நடத்தப்பெற்று ஆண்டு

விழாவன்று முதல் பரிசு பெற்ற இருவருக்குத் தலா ஒன்றரைப் பவுன் தங்கப் பதக்கமும், இரண்டாம் பரிசு பெற்ற ஒருவருக்கு ஒரு பவுன் பதக்கமும் வழங்கப்பட்டன. போட்டிக்கு வந்த கதைகள் சுமார் 30.

சில மாதங்களுக்குப் பிறகு **ஆனந்த விகடன்** பொறுப்பாசிரியர் **தேவன்** காலமான செய்தி கிடைத்ததும் அவர் ஞாபகார்த்தமாக மற்றொரு சிறுகதைப் போட்டியைத் தம் சொந்தச் செலவில் நடத்த ஸ்ரீ கி. மூர்த்தி முன்வந்தார். தேவன் மலாயாவுக்கு வந்திருந்தபோது ஸ்ரீ மூர்த்தி அவருடைய நண்பர் ஆனார். இந்தப் போட்டிக்கு முதல் பரிசு 150 ரூபாய், இரண்டாவது 75 ரூபாய். போட்டி நடைபெற்றது. இரண்டு எழுத்தாளர்களுக்கு அந்த இரண்டு பரிசுகளையும் வழங்கினார் ஸ்ரீ மூர்த்தி.

மேற்கண்ட ஒவ்வொரு போட்டியிலும் மூர்த்தி, குணசேகர், நான் ஆகிய மூவரும் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுத்தோம். தமிழ்ப் பண்ணைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்: **சி. வேலுசுவாமி** (கோலாலம்பூர்), **ராமசாமி** (பாரிட் புந்தார்), **எஸ். வி. சுப்பிரமணியன்** (கோலாலம்பூர்).

தேவன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்: **நாகுமணாளன்** (பத்து தீகா எஸ்டேட்), **எஸ். வடிவேல்** (லாபு எஸ்டேட்). இந்த இருவரும் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள்.

மலாயா எழுத்தாளர்களைப் பற்றியும் அவர்களுடைய எழுத்துக்களைப் பற்றிய மேலும் சில விபரங்களையும் சொல்லி இக்கட்டுரையை முடிக்கிறேன்.

மலாயாவின் இருபது எழுத்தாளர்களும் – குறிப்பிடத்தக்கவர்கள் என்று ஆரம்பத்தில் சொன்ன எழுத்தாளர்கள் – சிறுகதைகள் மட்டுமே எழுதுகிறவர்கள். ஒருவர் மட்டுமே விதிவிலக்காக ஒரு தொடர் நாவலும் சில ஒலிபரப்பு நாடகங்களும் எழுதியிருக்கிறார். மேற்படி இருபது பேரில் சேராத மூவர் உண்டு. அவர்களில் ஒருவர் ஒலிபரப்பு நாடகங்களே எழுதுபவர்; இருவர் கட்டுரைகள் மட்டுமே – அதிலும் திருக்குறளைப் பற்றிய கட்டுரைகள் மட்டுமே – எழுதிக் கொண்டிருந்தார்கள்.

மேற்படி இருபது பேரில் ஒரு எழுத்தாளர் பெண்மணி; அவரைத் தவிர மற்றப் பெண் எழுத்தாளர்களும் சுமார் ஐவர் உண்டு.

இருபது பேரில் என் கருத்துப்படி முதல்தரமான சிறுகதை ஆசிரியர்கள், **ஸ்ரீ செ. ஆலிவர் குணசேகர், பொ. சா. பரிதிதாசன், சி. வேலுஸ்வாமி, நாகுமணாளன், சி. வடிவேல், இராச இளவழகன், மு. தனபாக்கியம்** ஆகியோர். தமிழ்நாட்டின் எந்தப் பத்திரிகையிலும் இடம்பெறக்கூடிய சிறுகதைகளை எழுதக்கூடியவர்கள் இவர்கள். தமிழகத்தின் பிரபலமான பத்திரிகைகளில் எழுதும் பிரபலமான எழுத்தாளர்களின் கதைகளைவிட எந்த விதத்திலும் தரத்தில் குறையாத கதைகளை இவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

செ. ஆலிவர் குணசேகரின் சிறுகதைத் தொகுதி ஒன்று **நினைவின் நிழல்** என்ற பெயருடன் சென்னை ஸ்டார் பிரசுராலயத்தினரால்

வெளியிடப்பெற்றிருக்கிறது. இனிய, லாவகமான, பரவசம் ஊட்டுகின்ற தமிழ் நடையில் பல சிறந்த காதல் கதைகள் எழுதியிருக்கிறார். இவர் ஆங்கிலத்திலும் சிறப்பாக எழுதக்கூடியவர். ஆங்கிலப் பள்ளி ஆசிரியராகவும், பின்பு ஆங்கிலத் தினசரிப் பத்திரிகை ஒன்றின் நிருபராகவும் இருந்தவர். இப்பொழுது ஓர் ஆங்கில வாரப் பத்திரிகையின் ஆசிரியர்.

பொ. சா. பரிதிதாசன் – இவர் தமிழ்ப் பள்ளி ஆசிரியர். உருக்கமான கட்டங்களை உருக்கமான நடையில் சித்திரிப்பதில் அரிய திறமை படைத்தவர். இவர் எழுதிய ***பறந்து சென்ற பைங்கிளிக்கு*** என்ற கதை அற்புதமான கதை.

சி. வேலுஸ்வாமி – தமிழ்ப் பண்ணைச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ***மீனாட்சி*** என்ற சிறந்த கதையை எழுதியவர். இவரும் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்.

நாகு மணாளன், சி. வடிவேல் -- இருவரும் தேவன் ஞாபகார்த்தப் போட்டியில் பரிசு பெற்ற கதாசிரியர்கள். தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள்.

இராச. இளவழகன் – ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் பணியாற்றுபவர். இவருடைய கதைத் தொகுதி ஒன்று வெளிவந்தால் தமிழுலகம் நிச்சயம் வரவேற்றுப் பாராட்டும்.

மு. தனபாக்கியம் – மலாயாவில் ஆங்கிலப் பள்ளி ஆசிரியையாக இருந்த யாழ்ப்பாணப் பெண்மணி. இப்போது திருமணமாகி கணவருடன் கொழும்பில் இருக்கிறார்.

சி. கோன் – இவர் ஒருவர்தான் சிறுகதைகள் எழுதுவதோடு தொடர் நாவலும், நாடகங்களும் எழுதியிருக்கிறார். வலுவான தமிழ் நடையில், பரபரப்பூட்டும் சம்பவங்களை நன்கு சித்திரிப்பவர். அரசாங்கத் தகவல் இலாகாவில் ஓவியராகப் பணியாற்றுகிறார். மேடை நாடகங்களிலும் நடிக்கக்கூடியவர். இவர் ஜமைக்காவில் பிறந்து மலாயாவில் குடியேறிய தமிழர்.

சி. அன்பரசன் – தமிழ்ப் பள்ளி ஆசிரியர். அருமையான தமிழ் நடையில் எழுதக்கூடியவர்.

எஸ். வி. சுப்பிரமணியன் – குடும்ப வாழ்க்கையின் சலனங்களை நன்றாகச் சித்திரிப்பவர்.

கி. மூர்த்தி – இவர் எழுதிய கதைகள் மிகக் கொஞ்சம். ***சுந்தரராமனின் தற்கொலை*** என்ற கதை முதல்தரமான கதை.

சி. சோமசேகரன் – புத்தக வியாபாரி. நல்ல எழுத்தாளர்.

தூதன் – அச்சுக்கோக்கும் தொழிலாளி. ஹாஸ்யமாக எழுதுவதில் வல்லவர். இவர் எழுதிய ***லட்சியவாதி*** என்ற நாடகம் மேடையில் வெற்றிகரமாக நடிக்கப்பெற்றது. தமிழ்நாட்டு மேடையில் நடிக்கப்பெறும் 90 சதவிகித நாடகங்களுக்கு இணையாகச் சொல்ல வேண்டிய நாடகம் அது.

சி. கமலநாதன் – தமிழ்ப்பள்ளி ஆசிரியர். ஹாஸ்யமாக எழுதுபவர். மலாயாவின் சூழ்நிலையைத் தத்ரூபமாகச் சித்திரிப்பவர்.

இத்தனை எழுத்தாளர்களுக்கும், பத்து வருஷ கால எழுத்து முயற்சிக்குப் பிறகு ஓரளவு சலிப்புத் தட்டியதுபோல் தோன்றியது. இதற்கு முக்கியமான காரணம் அவர்களுடைய கதைகளுக்குப் பத்திரிகைகள் அன்பளிப்பு கொடுக்க முன்வராததுதான். மலாயா ரேடியோவில் அவ்வப்போது ஒலிபரப்பும் நாடகங்களுக்கு மிகவும் குறைந்த தொகையே – நாடகத்துக்கு 15 ரூபாய் வீதம் – சன்மானமாகக் கொடுக்கப்படுகிறது. அந்நாட்டின் வாழ்க்கைத் தரத்தைப் பார்க்கும்போது, இது மிகவும் குறைந்த தொகை. தமிழ்நாட்டில் ஐந்து ரூபாய் வாங்குவதைப் போன்றது.

வாசகர்களும் மலாயா எழுத்தாளர்களின் கதைகளைப் பாராட்டுவதில் போதிய அக்கறை காட்டவில்லை. தமிழ் நாட்டிலிருந்து வரும் பத்திரிகைகளில் வெளிவரும் கதைகளே உயர்ந்த கதைகளாக இருக்க முடியும் என்ற தப்பபிப்பிராயமும் பலருக்கு இருந்து வருகிறது. அவர்கள் தங்கள் மூட பக்தியினால் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவரும் மட்டமான சில கதைகளைக்கூட, மலாயா எழுத்தாளர்களின் நல்ல கதைகளைவிடச் சிறந்தனவாகக் கருதுகிறார்கள். இப்படிப்பட்ட சாதகமற்ற நிலைகள் மாறவேண்டும். எழுத்தாளர்களுக்கு ஊதியமும் உற்சாகமும் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால், அருமையான நவீன இலக்கியங்கள் பல அந்நாட்டில் தோன்றுவது நிச்சயம்.

இன்றைய நிலையிலும், 20 தமிழ் எழுத்தாளர்களின் 20 சிறந்த கதைகளைத் திரட்டி ஒரு தொகுப்பு வெளியிடத் தீர்மானித்தால், 2 கதைகளையாவது மலாயாவிலிருந்து தருவிக்காமல் முடியாது. மீதி

18 கதைகளில் 8 கதைகளைத் தமிழ்நாட்டிலிருந்து பொறுக்கி எடுத்தாலும் ஒன்றுதான் மலாயாவிலிருந்து பொறுக்கி எடுத்தாலும் ஒன்றுதான் என்னும்படி இருக்கும்.

இப்படி நல்ல கதைகளை சிருஷ்டிக்கும் எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களுடைய எழுத்துக்களை தமிழ்நாட்டும் பத்திரிகைகளும் வெளியிடத் தொடங்கினால், தமிழுக்கும் புதியதொரு செல்வத்தை ஈட்டும் சிரிய பணியாக இருக்கும் என்பது என் திடமான கருத்து.

ஒரு வகையில் பார்த்தால், காலம் கடந்த பிறகு, கு. அழகிரிசாமி 'ஐஸ்' வைத்து எழுதுகிறாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது. உண்மையில், கு.அ. சொல்வதுபோல இந்த எழுத்தாளர்கள் அந்தச் சிகரத்தை எட்டவில்லை என்று சொல்வதற்கு நாம் வெட்கப்பட வேண்டியதில்லை. உலகப் போருக்குப் பிறகு மீண்டும் தலைதூக்கிய பத்திரிகைகள் சொந்தக் காலில் நின்று நிலைபெற தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்தன. வாசகர் கூட்டம் குறைவு. எழுத்தாளர்களுக்கும் ஒரு தெளிவான பாதை இல்லை. எழுத்தில் மெருகேற நேசனையும் முரசையும் விட்டால் வேறு கதி இல்லை. எழுத்துப் பயிற்சி கொடுப்பது பத்திரிகையின் வேலை அன்று. காலத்தின் கோலத்தால் நேசனும் முரசும் அதில் ஈடுபடவேண்டியதாயிற்று.

1957ல் மலாயா சுதந்தரம் பெற்றது. அந்த ஓராண்டில் நிகழ்ந்த சில முக்கிய இலக்கியச் செய்திகளை அவற்றில் சம்பந்தப்பட்ட கு.அ மூலம் கேட்பது சுவையாகவே உள்ளது. **தமிழ் நேசன் 1957 மெர்தேகா ஆண்டு மலர்** கு. அழகிரிசாமியின் கைவண்ணத்தில் உருவானது. சுதந்தர மலாயாவின் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானின் வண்ணப் படத்தை முகப்பில் போட்டு அழகு பார்த்தார் கு.அ. அந்த பாக்கியம் அழகிரிசாமிக்குக் கிடைத்தது எதிர்பாராத ஒரு நற்பேறு.

தமிழகம் திரும்பிய கு.அழகிரிசாமிக்கு வாழ்க்கை வளமாக அமையவில்லை. நோய்வாய்ப்பட்டார். இந்நிலையிலும் இலக்கியமே கதி என்று கிடந்தார். எழுதும் கை மட்டும் ஓயவில்லை. 47ஆவது வயதில் 1970ல் இறந்து போனார். காலமான சில மாதம் கழித்து அவ்வாண்டின் **சாகித்திய அகாடமி பரிசு** அழகிரிசாமிக்கு வழங்கப்பட்டது. அவருடைய சாதனைகள் பலதரப்பட்டவையாக இருந்தபோதிலும் **அன்பளிப்பு** என்ற சிறுகதைத் தொகுதியை முன்னிறுத்தியே பரிசு அளிக்கப்பட்டது. **கல்கி**, **பாரதிதாசன்** ஆகியோரைத் தொடர்ந்து காலமான பிறகு விருது பெற்ற மூன்றாவது படைப்பாளி **கு. அழகிரிசாமி**. தென் தமிழகத்தில்


கோவில்பட்டிக்கு அருகில் இடைச்செவல் கிராமத்தில் பிறந்து அரிய சாதனை படைத்த அழியாச்சுடர் அவர்.

அதே கிராமத்தில், அழகிரிசாமிக்கு ஒரு வாரம் முன்னதாகப் பிறந்தவர் மற்றோர் இலக்கியப் படைப்பாளி **கி. ராஜநாராயணன்**. இருவரும் இனிய தோழர்கள். ஆனால் இலக்கியப் பாதையில் அவர்களின் பயணம் வேறு திசைகளில் சென்றது. ராஜநாராயணனுக்கும் 1991ல் சாகித்திய அகாடமி பரிசு கிடைத்தது **கோபல்லபுரத்து மக்கள்** நாவலுக்காக. ஒரே கிராமத்தில் பிறந்த இரண்டு பேருக்கு சாகித்திய அகாடமி பரிசு கிடைத்தது இந்திய இலக்கியத்தில் நிகழ்ந்திருக்கும் அபூர்வ சம்பவம். இரண்டு பேருமே தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்பதும் சற்று அபூர்வந்தான். *






கு.அழகிரிசாமி-கையெழுத்து




கு.அழகிரிசாமி குடும்பம்




நினைவோடை கு.அழகிரிசாமி



கு.அழகிரிசாமி. நூற்றாண்டுவிழா தொகுப்பு







தனிவாழ்க்கை

கு.அழகிரிசாமி கோயில்பட்டி அருகே ஒரு சிற்றூரில் அரசு உதவிபெறும் பஞ்சாயத்துபோர்டு பள்ளியில் ஆரம்பப்பள்ளி ஆசிரியராகச் சேர்ந்தார். சார்பதிவாளர் அலுவலகத்தில் எழுத்தர் வேலை கிடைத்தது. முப்பத்தைந்து ரூபாய் ஊதியம் அளித்த அந்த வேலை அன்று மதிப்பு மிக்கது. ஆனால் அவரால் அவ்வேலையில் ஈடுபட முடியவில்லை. வேலையில் இருக்கையிலேயே கதைகளை எழுதிக்கொண்டிருந்தார். அவருடைய கதைகளை வெளியிட்ட ஆனந்தபோதினி இதழின் ஆசிரியர் நாரண துரைக்கண்ணன் அவரை சென்னைக்கு வரும்படி அழைத்தார்.சென்னைக்குச் சென்ற அழகிரிசாமி அங்கே இதழாளர்களுக்கு அளிக்கப்பட்ட மிகச்சிறிய ஊதியத்தில் வாழமுடியாமல் மீண்டும் கோயில்பட்டிக்கே வந்து சார்பதிவாளர் அலுவலக வேலையை ஏற்றார். ஆனால் அந்த வேலையில் அவர் உள்ளம் செல்லவில்லை. எனவே மீண்டும் வேலையை துறந்து ஆனந்தபோதினி இதழில் சென்று சேர்ந்தார்.

1952-ல் கு.அழகிரிசாமி மலேசியா தமிழ் நேசன் இதழின் ஆசிரியராக சென்றார். 1955-ல் மலேசியாவில் இசைநாடகங்களை அவர் தயாரிக்கும் பணியில் இருந்தபோது இசையிலும் நடிப்பிலும் ஆர்வம் கொண்டிருந்த சீதாலட்சுமியை சந்தித்து காதல்கொண்டார். திருச்செந்தூரில் பாரம்பரியமான இசைக் குடும்பத்தில் பிறந்த சீதாலெட்சுமியின் தந்தை ஹரிஹர ஐயர் ஹார்மோனிய வித்வான். சீதாலெட்சுமி சிறுமியாக இருக்கும்போது ஹரிஹர ஐயர் மலேசியாவுக்குக் குடும்பத்தை அழைத்துச்சென்றார். ஹரிஹர ஐயர் மறைந்த பின் சீதாலட்சுமி அங்கே இசைக்கலைஞராக இருந்தார். வீட்டார் எதிர்ப்பை மீறி சீதாலட்சுமி அழகிரிசாமியை பென்டாங் சிவசுப்பிரமணியர் கோவிலில் வைத்து மணந்துகொண்டார்.

1957-ல் மனைவியுடனும் மகனுடனும் தமிழ்நாட்டுக்கு திரும்பிய அழகிரிசாமி காந்தி நூல்வெளியீட்டு கழகத்தில் மூன்றாண்டுகள் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். 1960 முதல் நவசக்தி இதழில்

துணை ஆசிரியராகச் சேர்ந்தார். 1965-ல் அப்பணியில் இருந்து விலகி 1970-ல் மறைவது வரை சுதந்திர எழுத்தாளராக வாழ்ந்தார்.

கு.அழகிரிசாமிக்கு இராமச்சந்திரன், ராதா ,சாரங்கராஜன் ,பாரதி என நான்கு வாரிசுகள். கு.அழகிரிசாமி மறைந்தபோது ஆறாம் வகுப்பு மட்டுமே படித்திருந்த சீதாலக்ஷ்மி தன் மகள் ராதாவிடம் இருந்து கற்றுக்கொண்டு மகளுடன் தானும் பள்ளியிறுதித் தேர்வு எழுதி வென்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் வேலை பார்த்து தன் குழந்தைகளை படிக்கவைத்தார். அழகிரிசாமியின் நண்பராக இருந்த வி.எஸ்.சுப்பையா, அவ்வேலையை சீதாலட்சுமிக்கு வாங்கிக்கொடுத்தார். அழகிரிசாமி -சீதாலெட்சுமியின் மூத்த மகன் ராமச்சந்திரன் வங்கி மேலாளராக இருந்து ஓய்வுபெற்றிருக்கிறார், மூத்த மகள் ராதா மின்னணு, தகவல் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்தவர். இளைய மகன் அ.சாரங்கராஜன் ஒளிப்பதிவுக் கலைஞர், கு.அழகிரிசாமி பற்றிய ஆவணப்படம் ஒன்றை எடுத்தவர். அழகிரிசாமியின் இளைய மகள் பாரதி மனநல மருத்துவர்.

கு.அழகிரிசாமி படைப்புகள்

Posted by Editor11/04/2013No CommentsPosted inUncategorized

https://bookday.in/%E0%AE%95%E0%AF%81-%E0%AE%85%E0%AE%B4%E0%AE%95%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF-%E0%AE%AA%E0%AE%9F%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D/

சிறுகதைகள்

1. அக்கினி கவசம் 2. அதிருப்தி 3. அபார ஞாபகம் 4. அழகம்மாள் 5. அழகின் விலை 6.அன்பளிப்பு 7. ஆண் மகன் 8. ஆதாரம் இருக்கிறதா? 9. இதுவும் போச்சு சிவசிவா! 10. இரண்டு ஆண்கள் 11. இரண்டு கணக்குகள் 12. இரண்டு பெண்கள் 13. இரவு 14. இரு சகோதரர்கள் 15. இருவர் கண்ட ஒரே கனவு 16. உலகம் யாருக்கு? 17. உறக்கம் கொள்ளுமா? 18. எங்கிருந்தோ வந்தார். 19. ஏமாற்றம் 20. ஒரு மாத லீவ் 21. ஒருவன்

இருக்கிறான் 22. ஒட்டப் பந்தயம் 23. கண்ணம்மா 24. கல்யாண கிருஷ்ணன் 25. கவியும் காதலும் 26. கற்பக விருட்சம் 27. காடாறுமாதம் 28. காதல் பிரச்னை 29. காதல் போட்டி 30. கார் வாங்கிய சுந்தரம் 31. காலகண்டி 32. காற்று 33. கிழவியின் லட்சியம் 34. குமாரபுரம் ஸ்டேஷன் 35. குழந்தையின் தியாகம் 36. சத்தியவான் 37. சந்திப்பு 38. சரஸ்வதி பூஜை 39. சாப்பிட்ட கடன் 40. சிங்கப்பூர் சென்ற மகன் 41. சிரிக்கவில்லை 42. சிறுமைக் கதை 43. சுப்பையாத் தேவரின் கனவு 44. சுய ரூபம் 45. செவிசாய்க்க ஒருவன் 46. சொல்லும் பொருளும் 47. ஞாபகார்த்தம் 48. தகப்பனும் மகளும் 49. தம்பி ராமையா 50. தர்ம ராஜ்யம் 51. தரிசனம் 52. தவப் பயன் 53. தன்னையறிந்தவர் 54. தியாகம் 55. திரிபுரம் 56. திரிவேணி 57. திருவொற்றியூர் வல்லி 58. தீ விபத்து 59. தெய்வம் பிறந்தது 60. தேவ ஜீவனம் 61. தேவையும் தெய்வமும் 62. நல்லவள் 63. பங்கஜத்தின் தற்கொலை 64. பட்டுச் சொக்காய் 65. பாம்புக் குட்டி 66. பார்த்தது 67. பாலம்மாள் கதை 68. புத்தி 69. புதிய ரோஜா 70. புது உலகம் 71. புரட்சி எழுத்தாளரின் கதாநாயகி 72. புன்னகை 73. பெரிய பேய் 74. பெரிய மனுஷி 75. பெருமாள் எழவில்லை 76. பேதைமை 77.பைரவி 78. போலி 79. மளிகைக் கடை சரசுவதி 80. மற்றொரு பயிற்சி 81. மனப்பால் 82. மாறுதல் 83. மீனா 84. முகக் களை 85. முருங்கைமர மோகினி 86. மூல காரணம் 87. யாருக்குக் கட்டிய வீடு 88.ரச விகாரம் 89. ராஜா வந்திருக்கிறார் 90. வசந்தாவின் தந்தை 91. வரப்பிரசாதம் 92. வள்ளியம்மையின் அதிர்ஷ்டம் 93. வள்ளியின் வாழ்க்கை 94. வாத்தியாரம்மாள் 95. விட்ட குறை 96. விட்ட குறையைத் தொட்ட குறை 97.விதவை 98. வெறும் நாய் 99.ஜாதியாசாரம் 100. 17-ம் நம்பர் வீட்டு நாய். 101. நிலைக் கண்ணாடி 102. பித்தளை வளையல் 103. மனசும் கல்லும் 104. வரம் வாங்கியவர் 105. வனஜம் 106. வெந்தழலால் வேகாது.

சிறுவர் கதைகள்1.

காளிவரம் 2. மூன்று பிள்ளைகள்

நாவல் 1.

டாக்டர் அனுராதா 2.தீராத விளையாட்டு 3. புது வீடு புது உலகம் 4.துறவு (குறுநாவல்)

நாடகம் 1.

கவிச்சக்கரவர்த்தி 2.ஞானரதம் 3.பரங்கியர் வந்தார் 4. வஞ்சமகள் 5.ஜன்மப்பகை மேடை நாடகம் 1. மகுடாபிஷேகம் 2.வாழ்வில் வசந்தம் 3. வைகுண்டத்தில் வால்மீகி கட்டுரைத் தொகுப்புகள் 1. இலக்கிய அமுதம் 2. இலக்கிய ஆய்வு 3. இலக்கியச் சிந்தனை 4. இலக்கியச் சுவை. 5. இலக்கியத் தேன் 6. இலக்கிய நயம் 7.இலக்கிய விருந்து 8. கதம்ப மாலை 9. கு. அழகிரிசாமி கட்டுரைகள் . தமிழ் தந்த கவி இன்பம் 11. தமிழ் தந்த கவிச் செல்வம் 12. தமிழ் தந்த கவியமுதம் 13. நான் கண்ட எழுத்தாளர்கள்

மொழி பெயர்ப்பு நூல்கள்

1. அக்பர் 2.அமெரிக்காவிலே 3. ஆரோக்கியத் திறவுகோல் 4. காந்தியும் கிராமத் தொழில்களும் 5. கார்க்கி கட்டுரைகள் 6. பலநாட்டுச் சிறுகதைகள் 7. ராமநாமமும் இயற்கை வைத்தியமும் 8. லெனினுடன் சில நாட்கள்.

பதிப்பு நூல்கள் 1.

கம்பராமாயணம் (சில பகுதிகள்) 2. காவடிச் சிந்து. பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள கு.அ.வின் சிறுகதைகள் 1. ஆண் மகன் – செக் மொழி 2. தரிசனம் -ஆங்கிலம் 3. திரிபுரம் -குஜராத்தி 4. பட்டுச் சொக்காய் -மலையாளம் 5. மற்றொரு பயிற்சி – மலையாளம் 6. ராஜாவந்திருக்கிறார் – ருஷ்ய மொழி. v

"அன்பளிப்பு"

https://www.valaitamil.com/ku-alagirisamy-anbalippu_1682.html

கு. அழகிரிசாமியின் 'அன்பளிப்பு' சிறுகதை

21/12/2017 by Aekaanthan ஏகாந்தன், posted in அனுபவம், இலக்கியம், புனைவுகள்

https://aekaanthan.wordpress.com/2017/12/21/%E0%AE%95%E0%AF%81-%E0%AE%85%E0%AE%B4%E0%AE%95%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%85%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%AA/

நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியிருக்கும் கு. அழகிரிசாமி, தன் கலைப்படைப்புகளுக்காக இலக்கிய வாசகர்களின் கவனத்துக்கு வருகிறார். குழந்தைகள் உலகின் ஆசாபாசங்கள், சந்தோஷங்கள் குறித்து ஆர்வமாக அவதானிக்கும் இந்தப் படைப்பாளி, நம்மை அந்த அதிசய உலகத்தினுள் கொஞ்சம் எட்டிப் பார்க்கவைக்கிறார். அவரது 'அன்பளிப்பு' என்கிற இந்தச் சிறுகதையைக் கொஞ்சமாகப் பார்ப்போம்:

கு. அழகிரிசாமிகதைக்காலம் இந்திய சுதந்திரக்குப் பின்னான பத்தாண்டுகள் எனக்கொள்ளலாம். சென்னையின் மாம்பலத்தில் ஒரு வீட்டில் வயதான அம்மாவும், பத்திரிக்கை அலுவலகத்தில் வேலைபார்க்கும் இளைஞனான அவளது மகனும் வசிக்கிறார்கள். கதைசொல்லி இந்த இளைஞன்தான். அக்கம்பக்கத்துக் குழந்தைகள் – அவற்றில் எட்டாவது, ஒன்பதாவதெனப் படிப்பவைகளும் உண்டு- இவனிடம் வந்து 'மாமா..மாமா' என நட்பு பாராட்ட ஆரம்பித்துவிட்டன. ஆரம்பத்தில் சித்ரா, அவளது அண்ணன் சுந்தர்ராஜன், பின்னர் பிருந்தா, தேவகி, கீதா, சாரங்கன். இவன்மீது ஏன் இந்த ஈர்ப்பு அந்த சிறுவர் சிறுமிகளுக்கு? குழந்தைகளோடு குழந்தையாகப் பழகும் சுபாவமுள்ளவன் என்பது ஒரு காரணம். மற்றொன்று – இவன் அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு வருகையில், அலுவலகத்தில் மதிப்புரைகளுக்காகத் தனக்குக் கொடுக்கப்பட்ட நிறைய கதைப் புத்தகங்களைத் தூக்கி வருவதை இந்தக் குழந்தைகள் பார்த்துவிட்டன! இந்த 'மாமா'வின்மீது வந்தது ஒரே கவர்ச்சி. கவனியுங்கள் –இங்கே நாம் பார்ப்பது 'அந்தக்கால'க் குழந்தைகள். அது இப்போதிருக்கும் பொல்லாத காலமல்ல! இந்தக்காலம்போல் மொபைல், வீடியோ விளையாட்டுக்கள், இண்டர்நெட் இத்தியாதிகள் இல்லாத, குழந்தைகள் குழந்தைகளாகவே இருந்த பொற்காலம். பெற்றோரும் ஆசிரியர்களும், பாடங்களுக்கு வெளியேயும், குழந்தைகளின் வாசிப்பை ஊக்குவித்தார்கள். பள்ளிக்கூடத்தைத் தாண்டிய கதைப் புத்தகங்களுக்காக குழந்தைகள் ஏங்குகின்றன! இப்பத் தெரியுதா நம்ப 'மாமா'வுக்கு ஏன் இத்தனை மவுசு என்று.

ஒரு ஞாயிறன்று, இந்த இளைஞன் (கதைசொல்லி/மாமா) காலையில் எழுந்திருக்க நேரமாகிவிட்டது. அடுத்தநாள் ஞாயிறுதானே என்று சனி இரவு வெகுநேரம் படித்துக்கொண்டிருந்ததால் வந்த வினை. அவனது தோழமைகளான சிறுவர், சிறுமியர் காலையிலேயே அவனது வீட்டுக்குள் பிரவேசித்துவிட்டார்கள். 'மணி

ஏழரையாகிவிட்டது. எழுந்திருங்கோ..தூங்குமூஞ்சி மாமா...!' என அவனை அடித்தும், கிள்ளியும், கலாய்த்து எழுப்பிவிடுகின்றனர். அவர்களது ஆவல் அவன் என்ன கதைப்புத்தகங்கள் வாங்கிவந்திருக்கிறான் என்று பார்ப்பது ஏற்கனவே அவர்களுக்காகக் கதைப்புத்தகங்கள் வாங்கிவருவதாக சொல்லியிருந்தான். ஆனால், தான் ஒன்றும் வாங்கிவரவில்லை என்றான் இப்போது. குழந்தைகள் விடுமா? கு.அழகிரிசாமி எழுத்தில் மேலே வாசியுங்கள் :

"பிருந்தா! மாமா பொய் சொல்கிறார்; கொண்டுவந்து எங்கேயாவது ஒளித்து வைத்திருப்பார். வாருங்கள், தேடிப்பார்க்கலாம்" என்றாள் சித்ரா.

அவ்வளவுதான், என்னுடைய அறை முழுவதும் திமிலோகப் பட்டது. ஒரே களேபரம். சித்ரா மேஜையைத் திறந்து உள்ளே கிடக்கும் பெரிய காகிதங்களையும், துண்டுக் காகிதங்களையும், கடிதங்களையும் எடுத்து வெளியே எறிந்தாள். துழாவித் துழாவிப் பார்த்தாள். மேஜையில் புத்தகம் எதுவும் இல்லாது போகவே, அதிலிருந்து சாவிக்கொத்தை எடுத்துப் பெட்டியைத் திறந்து தேட ஆரம்பித்துவிட்டாள். பிருந்தாவும் சுந்தரராஜனும் பீரோவைத் திறந்து புத்தகங்களை எடுத்துக் கண்டபடி கீழே போட்டார்கள்.

சின்னஞ் சிறு குழந்தையான கீதா கீழே உட்கார்ந்து, இறைந்து கிடக்கும் ஆங்கிலப் புத்தகங்களை அர்த்தமில்லாமல் திறந்து பார்த்துக்கொண்டிருந்தாள் ..

.. சாரங்கன் ஒருவன்தான் என்னோடு அமைதியாக உட்கார்ந்துகொண்டிருந்தான். அவன் எப்பொழுதுமே குறும்பு பண்ணமாட்டான்; விளையாடமாட்டான். மற்றக் குழந்தைகள் எல்லோரும் ஒரு விதம்; அவன் ஒருவிதம். என்னிடத்தில் பயபக்தியோடு நடந்துகொள்ளும் சிறுவன் அவன் ஒருவன்தான்.

ஜன்னலில் இருந்த புத்தகங்கள் ஒவ்வொன்றாக வந்து விழும் போது, ஒரே சந்தடியும் இரைச்சலுமாய்ப் போய்விடவே, சமையற்கட்டிலிருந்து என் தாயார் ஓடிவந்தாள். வந்து பார்த்தால், எல்லாம் ஒரே கந்தர் கோளமாகக் கிடந்தது.

"என்னடா இது, இந்தக் குழந்தைகள் இப்படி அமர்க்களம் பண்ணுகிறார்கள், நீ பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கிறாயே" என்று என்னைப் பார்த்துக் கோபித்துக் கொண்டாள்... "இவ்வளவு வயதாகியும்

இன்னும் குழந்தைகளோடு குழந்தையாய் விளையாடிக்கொண்டிருப்பது ரொம்ப அழகாகத்தான் இருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே அம்மா உள்ளே போய்விட்டாள்.

..அம்மாவுக்குப் பதில்குரல் கொடுத்துவிட்டு இந்தப்பக்கம் திரும்பும்போது, ஜன்னலிலிருந்து பத்துப் பதினாறு கனமான புத்தகங்கள் 'தடதட' வென்று அருவி மாதிரி கீழே விழுந்தன. ஒரு பழைய தமிழ் அகராதி அட்டை வேறு புத்தகம் வேறாகப் போய் விழுந்தது. குப்புற விழுந்த சில புத்தகங்கள் மீது சில கனமான புத்தகங்கள் அமுக்கவே கீழே அகப்பட்ட புத்தகங்கள் வளைந்து, ஒடிந்து, உருக்குலைந்து விட்டன. புத்தகங்கள் ஒரே மொத்தமாகக் கீழே விழுந்துவிட்டதைக் கண்டு எல்லாக் குழந்தைகளும் பயந்துவிட்டார்கள். கீழே விழுந்து கிடக்கும் புத்தகங்களையும் என்னையும் திரும்பத் திரும்பப் பார்த்தார்கள். கீழே விழுந்தவை மொத்தம் அறுபது புத்தகங்களாவது இருக்கும். குழந்தைகளின் முகத்தில் பயத்தின் சாயல் படர ஆரம்பித்துவிட்டது. நான் என்ன சொல்லப் போகிறேனோ என்று எதிர்பார்த்துக் கொண்டு, கண்ணிமைக்காமல் என் முகத்தையே பார்த்தார்கள். மற்றக் குழந்தைகளின் பயத்தைப் பார்த்த ஐந்து வயது நிரம்பாத கீதாவும் பயந்துபோய் என்னைப் பார்த்தாள் ..

இப்படி மாமாவிடம் முழுசுதந்திரம் எடுத்துக்கொண்டு அட்டகாசம் செய்யும் குழந்தைகள். அவைகளின் மனதை நோகடிக்காமல் பேசிப்பழகி, கதைப்புத்தகங்கள் வாங்கிக்கொடுத்துப் படிக்கச்சொல்லும் இந்த மாமா குழந்தைகள் பட்டாளம் இவரைப்பற்றி என்ன நினைக்கிறது, இந்த மாமாவின் மனதில் அந்தக் குழந்தைகள் யார் – கு.அழகிரிசாமி எழுதிச் செல்கிறார்:

...வெளிப்படையான பேச்சிலும் நடவடிக்கைகளிலும் ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்கும் நான் வித்தியாசம் காட்டி நடந்து கொள்ளவில்லை. உள்ளன்பிலும் வேற்றுமை காட்டவில்லை. முன்னால் சொன்னதுபோல ஏதோ ஒரு அலாதிப் பிரியம் சித்ராவிடமும் அவளது அண்ணனிடமும் ஏற்பட்டிருந்தது. ஆனால் குழந்தைகளோ என்னை ஒரே மாதிரி நேசித்தன. அவர்களுடைய பிரியத்தில் வேற்றுமை இல்லை. ஒவ்வொரு குழந்தையும் தனக்காகவே இந்த உலகத்தில் பிறந்த நண்பன் என்று என்னை நினைத்தது. ஒவ்வொன்றும் ஒரு மகத்தான நம்பிக்கையாக, ஒரு பெரிய ஆறுதலாக, ஒரு நல்ல வழிகாட்டியாக என்னைக் கருதியது. எந்த விதத்திலும் தனக்குச் சமதையான ஜீவன் என்று என்னைக் கருதியது. குழந்தைகள் என்னைப் பெரிய மனித பீடத்தில் தூக்கி வைக்காமல், நட்பு

முறையில் கைகோத்துக் கொள்ள வந்தார்கள். இவர்கள் என்னோடு விளையாடினார்கள்; என்னோடு சண்டை போட்டார்கள்; என்னை அடித்தார்கள்; என்னைக் கண்டித்தார்கள்; என்னை மன்னித்தார்கள்; என்னை நேசித்தார்கள்.

உலகத்தில் எல்லோரும் குழந்தைகளைக் கண்டால் பிரியமாக நடந்து கொள்ளுவதும், அல்லது விளையாடுவதுமாக இருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய அன்பில் ஒரு விளையாட்டுணர்ச்சியும், ஒரு நடிப்பும் கலந்திருக்கின்றன. குழந்தையைப் போலப் பேசி, குழந்தையைப் போல ஆடிப்பாடி, குழந்தையை விளையாட்டுப் பொம்மையாகக் கருதி அதற்குத் தக்கவாறு நடந்துகொள்ளுகிறார்கள். ஆனால் அந்தச் சூதுவாதறியாத **குழந்தைகளோ அப்படி நடிப்பதில்லை;** அவர்களுடைய அன்பில் அந்த விளையாட்டுணர்ச்சி கலக்கவில்லை. அவர்கள் உண்மையிலேயே அன்பு காட்டுகிறார்கள். இந்த உண்மை எனக்கு என்றோ, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மனதில் தைத்தது. அன்று முதல் நான் அவர்களைக் குழந்தைகளாக நடத்தவில்லை. நண்பர்களாக நேசித்தேன். உற்ற துணைவர்களாக மதித்தேன். உள்ளன்பு என்ற அந்தஸ்தில் அவர்களும் நானும் சம உயிர்களாக மாறினோம். மாம்பலத்தில் எனக்கு இவர்கள்தான் நண்பர்கள். குழந்தைகளுடன் இம்மாதிரிப் பழகுவதும் இம்மாதிரி விளையாடுவதும் அம்மாவுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஐம்பது வயதுத் தாயாருக்குத் தன் மகனை மனைவி மக்களுடன் குடித்தனம் செய்யும் தகப்பனாகக் காணத்தான் பிடிக்குமே தவிர, குழந்தைகளுடன் குழந்தையாக விளையாடிக் கொண்டும் சண்டை போட்டுக்கொண்டும் இருப்பதைக் காணப் பிடிக்குமா?

சுந்தர்ராஜனுக்கும் சித்ராவுக்கும் தான் வாங்கிவந்திருந்த புத்தகங்களைப் பகிர்ந்துகொடுத்தபின், இரண்டு வாரம் ஆகியிருக்கும். மற்ற குழந்தைகள் மாமாவின் வீட்டுக்கு வழக்கம்போல் வந்துபோய்க்கொண்டிருக்க, பிருந்தாவைக் காணோம். விஜாரித்ததில், அவளுக்கு ஜுரம் எனத் தெரிந்தது. சில நாட்கள் கழிந்தன. அவள் வரவில்லை. மாமாவுக்கு ஒரே கவலை. யாரைக் கேட்பது? பிருந்தாவின் வீட்டில் மாமாவுக்கு யாரையும் பழக்கமில்லையே. குழந்தைகளிடம் கேட்கவேண்டியதுதான். அவர்கள் என்ன சொல்வார்கள்? எழுதுகிறார் அழகிரிசாமி:

... ஜுரம் அதிகமாக இருக்கிறதா, குறைந்திருக்கிறதா என்று அவர்களுக்குச் சொல்லத் தெரியவில்லை. “பிருந்தா எப்போது பார்த்தாலும் படுத்துக்கொண்டே இருக்கிறாள்” என்று மட்டும் தெரிவித்தார்கள்.

ஒருநாள் இரவு எட்டு மணி இருக்கும். வீட்டு முற்றத்தில் ஈஸிச்சேரைப் போட்டுக் காற்றாட நிலா வெளிச்சத்தில் படுத்துக் கொண்டிருந்தேன். அப்போது தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்த பிருந்தாவின் வீட்டு வேலைக்காரனை அழைத்து, “பிருந்தாவின் உடம்பு எப்படி இருக்கிறது? ஜுரம் குறைந்திருக்கிறதா” என்று கேட்டேன்.

”இல்லை ஸார், நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு தான் இருக்கிறது. எதுவும் சாப்பிடுவதில்லை. இந்த நான்கு நாட்களில் குழந்தை துரும்பாக மெலிந்து போய்விட்டது. தூக்கத்தில் உங்களை நினைத்துத்தான் என்னென்னவோ புலம்பிக் கொண்டிருக்கிறாள்” என்றான் வேலைக்காரன்.

”என்னை நினைத்துப் புலம்புகிறாளா!” என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். “ஆமாம் ஸார். நேற்று ராத்திரிகூட ‘மாமா புத்தகம்’, ‘மாமா புத்தகம்’ என்று என்னென்னவோ சொல்லிக் கொண்டிருந்தாள்” என்றான்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. இந்தக் குழந்தையைப் போய்ப் பார்க்காமல் இருந்ததற்காக மிகவும் வருத்தப்பட்டேன். என் சங்கோஜத்தை மூட்டைகட்டி வைத்துவிட்டு மறுநாள் காலையில் அவசியம் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டேன். “போய்வா” என்று வேலைக்காரனை அனுப்பிவிட்டு, தனியாகப் படுத்து என்னென்னவோ யோசித்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது என்ற நிலைமை வந்துவிட்டது. அவ்வளவுதான், உடனே எழுந்து வீட்டுக்குள்போய் சட்டையை மாட்டிக் கொண்டு ‘விறு விறு’ என்று பிருந்தாவின் வீட்டுக்குச் சென்றேன்.

என்னென்னவெல்லாம் நடக்கிறது குழந்தைகளின் உலகில்.. ஒன்றும் புரியமாட்டேன்கிறதே, என்கிறீர்களா? படியுங்கள் அன்பர்களே, கு.அழகிரிசாமியின் சிறுகதை : ‘அன்பளிப்பு’.

லிங்க்: **http://azhiyasudargal.blogspot.in/2011/04/blog-post.html**

நன்றி: அழியாச்சுடர்கள் இணையதளம்

கு.அழகிரிசாமியின் சிறுகதைகளில் உளவியல் சிக்கல்கள்

முனைவர் அரங்க. மணிமாறன்

https://www.vallamai.com/?p=88651

மனித மனம் வினோதமானது.பல்வேறு நேரங்களில் வெவ்வேறு விதமாகச் செயல்படக்கூடியது.ஒருவன் மற்றவர் மீது அன்பு, வெறுப்பு, பொறாமை, அதீதப்பற்று ஆகியவை கொள்வதற்கு அவனது மனவியலே அடிப்படையாக அமைகிறது.

மனித மனத்தின் பரிமாணங்களை ஆராயும் உளவியல் இன்றைய ஆராய்ச்சிக் கூறுகளுள் ஒன்றாகத் திகழ்கிறது.

உளவியலாளர்கள் மனித மனம் ஒரு பனிக்குன்றுப் போன்றது.அதன் ஒரு பகுதிதான் வெளிப்படையாகத் தோன்றி வெளிமனமாக இருக்கிறதென்றும், மற்றொரு பகுதி மறைந்து நின்று மறைமனமாக இருக்கிறதென்றும் அவர்கள் விளக்கம் கூறுகிறார்கள் என்கிறார் பெ.துாரன்.1

உளவியல் எனும் சொல் கிரேக்க மொழி சொற்களான சைக்கி என்ற உயிரையும் லோகஸ் எனும் அறிவியலையும் குறிக்கும் சொற்களின் கூட்டிணைவாகும்.ஆன்மா, மனம் பற்றி ஆராயும் இது நடத்தையியல் தற்காலத்தில் வழங்கப்படுகிறது.

உளவியல் என்பதனைத் தற்காலத்தில் நடத்தை மற்றும் அனுபவத்தை அறிவியல் முறையில் ஆராயும் ஒரு பிரிவாகக் கொள்கின்றனர்.உளவியல் மனித மூளை அதன் சிந்தனை, புறநிலை ஆகியவற்றோடு தொடர்படையதாக உள்ளது.

மனிதனின் புறச்செயல்களை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து அதன்மூலம் அவை எங்ஙனம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும் புறநிலைகளால் ஏற்படும் நிகழ்வுகளால்

எவ்வாறு பாதிப்படைகின்றன என்பதையும் விளக்குவதே உளவியலாகும் என்கிறார் கி.நாகராஜன். 2

இத்தகைய உளவியல் சார்ந்த சிக்கல்களை கு.அழகிரிசாமியின் சிறுகதைகளின் வழி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

இரவு நேரத்தின் குணம்:

மனித மனம் தனிமையில் இருளில் எந்த தீமைகளையும் செய்ய துணிகிறது. அதற்குக் காரணம் இரவு இருள் நிறைந்தது. கொலை, கொள்ளை, களவு, விபச்சாரம் போன்ற தீமைகள் இரவிலேயே தடையின்றி நடக்கின்றன.

இரவு சிறுகதையில் இளம்வயது நண்பர்கள் கூடிபேசிக்கொள்கின்றனர். இரவுக்கென்று தனிப்பட்ட குணம் உள்ளதாகவும் பகலில் ஒரு பொருள் பற்றி தோன்றும் எண்ணத்திற்கும் இரவில் அதே பொருள் பற்றி தோன்றும் எண்ணத்திற்கும் வேறுபாடு உள்ளதாகவும் கூறுகின்றனர்.

இரவு வந்ததும் தனிமையின் துணிவோடு மனம் கெட்ட எண்ணங்களை எண்ணுகிறது. உலகம் இருண்டதும் மனிதன் துணிந்துவிடுகிறான் . எந்த கெட்ட காரியத்திற்கும் இரவு ஆதரவாகத்தான் இருக்கிறது. 3 என்று இரவின் உளவியல் ஆற்றலை வெளிப்படுத்துகிறார் கு.அழகிரிசாமி.

ஆண்பெண் நேசத்தில் வேறுபாடு:

திருமண வயதில் ஓர் ஆண் தான் பார்க்கும் எந்தப் பெண்ணையும் அவள் தனக்கு மனைவியாக வருவாளா என எண்ணிப்பார்க்க முடியும். ஆனால் ஒரு பெண் அப்படி நினைக்க முடியாது. சமுதாயம், கட்டுப்பாடு, கற்பு, ஆகிய காரணிகள் அதற்குக் காரணம்.

ஏமாற்றம் சிறுகதையில் நாயகன் கிருஷ்ணமூர்த்தி திருமணத்திற்குப் பின் பழைய நினைவுகளை அசைபோடும்போது தான் அவளை பால்ய வயதிலிருந்தே விரும்பி வருவதாகக் கூறுகிறான். ஆனால் அவன் மனைவி லஷ்மியோ மூன்றாம் வருடம் சந்தித்தபோதுதான் விரும்பியதாகக் கூறுகிறாள். இது அவனுக்கு பெருத்த அவமானமாகிவிடுகிறது.

“வீட்டுக்கு அப்பாவையோ அண்ணனையோ தேடிக்கொண்டு வருபவர்களுக்கு நான் பதில் சொல்லநேரிடும்போது வரக்கூடியவர்களெல்லாம் உங்களைப்போல மனப்பரவசத்துடன்தான் பேசுவார்கள்”. 4

திருமணத்திற்கு முன் எல்லா வாலிபர்களுக்கும் ஏற்படும் பரவசமே கிருஷ்ணமூர்த்திக்கும் ஏற்படுகிறது.ஆனால் பெண்ணுக்கு ஆணின் மீது நம்பிக்கை உருவான பிறகுதான் பெற்றோரின் சம்மதத்திற்கு பிறகுதான் நம்பிக்கையும் காதலும் வரும். அதுவன்றி எல்லா ஆடவரையும் கண்டவுடன் தன் கணவனாக நினைத்து பரவசப்பட முடியாது என்ற உளவியல் கருத்து இக்கதையில் வெளிப்படுகிறது.

குழந்தை உளவியல்:

பெரியவர்களைவிட குழந்தைகள் வேறுபாடு கருதாதவர்கள் மாசுமறுவற்றவர்கள். தன்மீது அன்புகொண்டவர்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்பவர்கள். கல்வி, பதவி, வயது, புகழ் ஆகியவற்றாலும் உயர்ந்தவர்களானாலும் குழந்தைகளுக்கு அது பெரிதில்லை.

அன்பளிப்பு கதையில் பல குழந்தைகளோடு நாயகன் நட்புக் கொள்கிறான். அக்குழந்தைகளுக்கு புத்தகங்களைப் பரிசளிக்கிறான். சாரங்கன் என்ற சிறுவன் மட்டும் வால்ட் விட்மனின் கவிதைத் தொகுப்பை கேட்கிறான். அவனால் இச்சிறு வயதில் புரிந்துகொள்ளமுடியாது எனக்கருதி நாயகன் தரமறுக்கிறான். அதனால் சிறுவன் கோபித்துக்கொள்கிறான். தன்தோழி ஒருத்திக்கு உடல்நலமிலாதபோது நாயகன் சென்று பார்த்துவந்ததைப்போல தன் வீட்டிற்கும் வரவேண்டும் என்கிறான்.

நாயகன் தன் நட்பு குழந்தைகளுடன் மட்டுமே. அவர்களின் பெற்றோர்கள் என்ன நினைப்பார்களோ என எண்ணி மறுக்கிறான்.

“எங்கள் வீட்டுக்கும் வாருங்கள் என்று கையைப்பிடித்து இழுத்தான்.

உங்கள் வீட்டிற்கு எதற்கு?

பிருந்தா வீட்டிற்கு மட்டும்?

பிருந்தாவிற்கு ஜீரம் அதனால் போய்ப்பார்த்து வந்தேன்.

ஊஹீம்.. எங்கள் வீட்டுக்கும் வரவேண்டும். ஆமாம்.5

பணக்கார குழந்தையின் வீட்டிற்குச்சென்றவன் ஏன் தன் வீட்டிற்கு வரவில்லை? அனைவருக்கும் புத்தகம் தந்தவன் தனக்கு ஏன் தரவில்லை? என்பது சாரங்கன் வாதம்.

நட்பு குழந்தைகளோடு மட்டுமே. அவர்களின் குடும்பத்தாரோடு இல்லை என்பது நாயகனின் பார்வை.

குழந்தைகள் அன்பு வைத்துவிட்டால் பேதம் பார்க்கமாட்டார்கள் என்ற உளவியல் சிக்கல் இக்கதையில் விடுவிக்கப்பட்டுள்ளது

மனம் எனும் புதிர்:

மனித மனம் எப்போதும் தன்னுள் ஏதோ ஒரு பாதிப்பையோ நிகழ்வையோ மனதில் வைத்துக்கொண்டு சமயம் வாய்க்கும்போதெல்லாம் அதன் பாதிப்புகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும்.

அழகம்மாள் சிறுகதையில் வாழ்ந்து கெட்டவரான கிருஷ்ணகோனாருக்கு உறவுமுறைப்பெண்ணான அழகம்மாளை திருமணம் செய்து வைக்கின்றனர். மகன் வளர்ந்து மதுரையில் கல்லூரியில் படிக்கிறான். விடுமுறைக்காக அவன் வரும்போதெல்லாம் தாயும் தந்தையும் ஒருவரோடு ஒருவர் சண்டையிடுகின்றனர். மற்ற நேரங்களில் இயல்பாக இருப்பவர்கள் தான் ஊருக்கு வரும்போதுமட்டும் ஏன் சண்டையிடுகின்றனர் என வேதனைக் கொள்கிறான்.

கறிச்சோறு போடும் போது அவனிடம் கொஞ்சம் கறிவிட்டுச் சாப்பிடேன் எனக்கூற இதைக்கேட்ட அழகம்மாள் நான் செய்ததும் செய்யாததும் அந்த அவிஞ்ச கண்ணுக்குத் தெரியப் போகிறதா? 6 (ப.466) என்றுச் சொல்லி மனதை நோகடிக்கிறாள்.

தற்போது தன் மகனின் மோகன வடிவையும் அவனது வளர்ச்சியையும் ஊரார் அவனை மதிப்பதையும் கண்டு தன்வாழ்வு இந்த ஊதாரியிடம் பறிபோனதை எண்ணி வேதனைக் கொள்கிறாள். அதன்வெளிப்பாடே எரிந்து விழுவதும் கண்டையிடுவதும் என்று உளவியல் சிக்கலை விடுவிக்கிறார்.

கௌரவ சண்டை:

நல்லவள் சிறுகதையில் வித்வான் வீட்டில் குடியிருக்கிறாள் ஜெயா. வித்வானின் மனைவி ராஜேசுவரி தன் வீட்டில் வாடகைக்கு குடியிருக்கும் ஜெயாவிடம் சிறுசிறு கடன் வாங்குகிறாள். சில நேரங்களில் அவர்களோடு காரணமின்றிச் சண்டையிடுகிறாள். கோபமாக பேசுவதும் தன் மகளை அவர்கள் வீட்டிற்கு போகாதே என்று திட்டி அடிப்பதும் தொடர்கிறது.

“ராஜேசுவரி அப்பறம் எனக்கு ஆராய்ச்சிக்குரிய விஷயமாவே மாறிவிட்டாள்.கடன்கொடுத்த தினத்தில் சண்டைக்கு வருவாள். கையில்

பணம் இருக்கும்போது அன்பில் உயிரையே தொடுக்கச் சித்தமாக இருப்பாள்.இவளை நல்லவள் என்று எப்படி சொல்லாமல் இருப்பது?”7

தன்வீட்டில் குடியிருப்பவளிடம் தான் கடன்வாங்குவதால் தன்னை அவள் ஏளனமாக நினைத்துவிடக்கூடாது என மான உணர்ச்சியினால் கோபமும் சண்டையும் போட்டுத் தன் கௌரவத்தை நிலைநாட்ட நினைக்கும் உளவியல் சிந்தனை இக்கதையில் வெளிப்படுகிறது.

அழகின் மீது நாட்டம்:

அழகற்ற தேவகியை யாரும் திருமணம் செய்துகொள்ளாத நிலையில் ஆறாம் வகுப்பு பெயிலாகி ஒரு மளிகைக் கடையில் கணக்குப் பிள்ளை வேலைப்பார்க்கும் பாண்டுரங்கன் திருமணம் செய்துகொண்டு பெண் பிள்ளைப் பெற்று வாழ்கிறான். தேவகி வந்த நேரம் குடும்பம் தழைக்கிறது. அவள் அழகில்லாதவள் என்பதை மறந்து மனைவிப் பித்தனாகி குடும்பம் நடத்துகிறான். வீட்டின் மேல்மாடியில் சில இளைஞர்களை குடிவைக்கின்றனர்.

தேவகி அலங்கார பிரியையாகி முப்பொழுதும் தன்னை அலங்காரப்படுத்திக் கொண்டே இருக்கிறாள். தாம் அழகற்றவள், வயதானவள் என்பதை மறந்து இளைஞர்களிடம் வளைய வந்து நட்பையும் பாராட்டையும் பெற விழைகிறாள்.

தன்னை அழகி என்று அவர் தொடர்ந்து கருதுகிறாரா என்பதை தெரிந்துகொள்வதற்காக அவள் சிறுநடை பயில்வாள்; கொஞ்சுவாள்; கோபிப்பாள்; கூப்பிட்டால் வரமாட்டாள். 8

இறுதியில் தன்மகளோடு வாடகைக்கு குடியிருக்கும் இளைஞர்களில் ஒருவன் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு பதறிப்போய் அவனை வசைபாடுகிறாள்.

இதனை அறிந்த பாண்டுரங்கன் தன் பிள்ளைகளை கவனிக்காமல் அலங்கார மயக்கத்திலேயே காலம் கழித்து இளசுகளிடம் சிரித்துப்பேசி குதித்து கும்மாளமிட்டதைக் கண்டித்தும் வசைமாரி பொழிகிறான்.

இதனால் அவள்,

“அலங்காரத்தையும் கைவிட்டாள். உலகத்தையே வெறுத்தவளாக வீட்டிற்கும் வாசலுக்கும் நடமாடிக் கொண்டிருந்தாள்” 9

இவ்வாறு அழகின்மை எனும் தாழ்வுணர்ச்சியினால் அலங்காரப் பைத்தியமாகி தவிக்கும் பெண்ணின் உளவியல் நிலையை வெளிப்படுத்துகிறார்.

முடிவுரை:

மனிதர்களின் ஒவ்வொரு நடத்தையிலும் உளவியல் உட்கூறு வெளிப்படுகிறது. கணவன்- மனைவியிடத்தும், மாமியார் மருமகளிடத்தும், பணக்காரன் ஏழைகளிடத்தும் உளவியல் காரணமாகவே மோதல்களும் சிக்கல்களும் உருவாகின்றன. ஒருவர் மனதை ஒருவர் புரிந்துகொண்டாலே சிக்கல்களுக்கான தீர்வுகள் கிடைக்கும். உளவியல் சிக்கல்கள் அற்ற சமுதாயமே பிரச்சனைகள் நீங்கி மேம்பட்ட சமுதாயமாக மலரும் என்பது கு.அழகிரிசாமியின் சிறுகதைகளின் வழி தெளியமுடிகிறது.

முதன்மை ஆதாரம்:

கு.அழகிரிசாமியின் சிறுகதைகள் (முழுத் தொகுப்பு)
பதிப்பாசிரியர் பழ.அதியமான்.
காலச்சுவடு பதிப்பகம்
669 கே.பி.சாலை நாகர்கோவில்-1
முதல் பதிப்பு ஏப்ரல் 2011.

அடிக்குறிப்புகள்:

1. பெ.தூரன் -மனமும் அதன் விளக்கமும்-ப.165
2. கி.நாகராஜன்-கற்றல் மனித வளர்ச்சி தொடர்பான உளவியல் ப.1.-ஸ்ரீராம் பதிப்பகம் சென்னை-2009.
3. இரவு-சிறுகதை பக்.73-74. கு.அழகிரிசாமி சிறுகதைகள் காலச்சுவடு பதிப்பகம் நாகர்கோவில். முதற்பதிப்பு ஏப்ரல் 2011.
4. மேற்குறித்த நூல் ஏமாற்றம் சிறுகதை ப.186.
5. மேற்குறித்த நூல் அன்பளிப்பு சிறுகதை ப.375
6. மேற்குறித்த நூல் அழகம்மாள் சிறுகதை ப.466
7. மேற்குறித்த நூல் நல்லவள் சிறுகதை ப.703
8. மேற்குறித்த நூல் முகக்களை சிறுகதை ப.1186
9. மேற்குறித்த நூல் முகக்களை சிறுகதை ப.1194

கு.அழகிரிசாமிக்கு சீதாலெட்சுமியின் ‘அன்பளிப்பு’

https://www.hindutamil.in/news/opinion/columns/671460-ku-azhagirisamy.html



Updated on:
16 May 2021, 6:50 am

தமிழ்ச் சூழலில் எழுத்தையே நம்பி வாழும் எழுத்தாளர்களின் வாழ்க்கை பெரும் போராட்டமாகத்தான் இருக்கிறது. அதிலும் ஒரு எழுத்தாளர் அகால மரணமடைந்துவிட்டால் அவரின் குடும்பம் பெரும் போராட்டத்துக்கு ஆளாகிறது. இதுதான் தமிழின் முன்னோடி எழுத்தாளர்களுள் ஒருவரான கு.அழகிரிசாமியின் (1923-70) மனைவி சீதாலெட்சுமிக்கும் நேர்ந்தது.

மே 12 அன்று காலமான சீதாலெட்சுமி திருச்செந்தூரில் பாரம்பரியமான இசைக் குடும்பத்தில் பிறந்தவர். சீதாலெட்சுமியின் தந்தை ஹரிஹர அய்யர் பிரசித்தி பெற்ற ஹார்மோனிய வித்வான். சீதாலெட்சுமி சிறுமியாக இருக்கும்போது அவருடைய அப்பா மலேசியாவுக்குக் குடும்பத்தை அழைத்துச்செல்கிறார். சீதாலெட்சுமியுடன் பிறந்தவர்கள் ஏழு சகோதரிகள், ஒரு சகோதரன். மலேசியா சென்ற சிறிது காலத்தில்

சீதாலெட்சுமியின் தந்தை இறந்துபோகவே அந்தக் குடும்பம் பாட்டு, நடனம் போன்றவற்றைச் சொல்லிக்கொடுத்து வாழ்க்கைப்பாட்டைக் கவனித்துக்கொள்கிறது. சீதாலெட்சுமி நன்றாகப் பாடக்கூடியவர்.

1952-ல் மலேசியாவுக்கு வந்த அழகிரிசாமி 'தமிழ்நேசன்' பத்திரிகையில் ஆசிரியராகச் சேர்ந்தார். 'முக்கூடற்பள்ளு' போன்ற இசை நாடகங்களுக்கு அழகிரிசாமி பாடல்களை எழுதிக்கொடுக்க சீதாலெட்சுமி பாடியிருக்கிறார். ராஜரத்தினம் பிள்ளை மலேசியாவுக்கு மூன்று மாதப் பயணமாக வந்திருந்தபோது அவரைப் புகழ்ந்து அழகிரிசாமி எழுதிய பாடலை சீதாலெட்சுமிதான் பாடியிருக்கிறார். அவர்களுக்கு இடையிலான காதல் கடிதங்களுள் ஒன்று அப்போது எப்படியோ ராஜரத்தினம் பிள்ளையின் கையில் சிக்கிவிட அவர்தான், "ஆசிரியருக்கும் அய்யர் பொண்ணுக்கும் காதல்" என்று பகிரங்கப்படுத்தியிருக்கிறாராம்.

அவர்களின் காதலுக்குப் பெண்வீட்டில் வசதி உள்ளிட்ட காரணங்களால் கடும் எதிர்ப்பு. எனினும், சீதாலெட்சுமி தைரியமாக வீட்டை விட்டு வெளியேறி 1955-ல் அழகிரிசாமியை மணந்துகொண்டார். இதற்கிடையில் பத்திரிகை நிர்வாகத்துக்கும் அழகிரிசாமிக்கும் இடையே உரசல் உண்டானது. தன்னுடைய எழுத்துகளுக்கு உரிய களம் இந்தியாதான் என்று உணர்ந்த அழகிரிசாமி 1957-ல் குடும்பத்தோடு இந்தியா திரும்புகிறார்.

இந்தியா வந்த பிறகு காந்தி நூல்கள் மொழிபெயர்ப்புப் பணி அவருக்குக் கிடைத்தது. அதன் பிறகு, 'நவசக்தி' இதழில் 5 ஆண்டுகள் வேலைபார்த்தார். அதற்குப் பிறகு, எந்த வேலையும் அவருக்கு நிரந்தரமாக அமையவில்லை. அழகிரிசாமி இறப்பதற்கு சிறிது காலத்துக்கு முன்புதான் தொமுசி ரகுநாதன் உதவியால் 'சோவியத் நாடு' என்ற தமிழ் இதழில் வேலை கிடைக்கிறது. வேலைக்குச் சேர்ந்து ஒரு வாரத்திலேயே உடல்நலம் குன்றுகிறது. எலும்பில் காசநோய் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. மூன்று மாதம் படுத்த படுக்கையாகக் கிடந்து இறுதியில் இதயத்தில் ஏற்பட்ட ஓட்டை காரணமாக 1970-ல் அழகிரிசாமி உயிரிழந்தார்.

நான்கு பிள்ளைகளும் சீதாலெட்சுமியும் அடுத்த வேளை உணவுக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில்தான் அடுத்து வந்த நாட்களைத் தள்ளினார்கள். அழகிரிசாமியின் நண்பரும் கருணாநிதி ஆட்சிக் காலத்தில் வீட்டு வசதிச் செயலராக இருந்தவருமான வி.எஸ்.சுப்பையா, சீதாலெட்சுமி எப்பாடுபட்டாவது எஸ்எஸ்எல்சி முடித்துவிட்டால் வீட்டு வசதித் துறையிலேயே வேலை வாங்கித் தருவதாக வாக்குறுதி அளித்தார்.

அதன் பிறகு, சீதாலெட்சுமி எஸ்எஸ்எல்சி படித்தார். அவருடைய மூத்த மகள் அவருக்குப் பாடங்களைச் சொல்லிக்கொடுத்தார். படிப்பை முடித்ததும் வி.எஸ்.சுப்பையா தான் வாக்களித்தபடி குமாஸ்தா வேலையை சீதாலெட்சுமிக்கு வாங்கித்தந்தார். மாதம் மாதம் உத்தரவாதமான சம்பளம். பிள்ளைகள் தலையெடுத்தாலும் ஓய்வுபெறும் வரை அந்த வேலையில்தான் சீதாலெட்சுமி இருந்தார்.

அந்த வேலையில் இருந்துகொண்டுதான் தன்னுடைய குடும்பத்தை முன்செலுத்தினார். அழகிரிசாமி இறந்த பிறகு கிடைத்த சாகித்ய அகாதமி விருதுத் தொகை ரூ.5 ஆயிரம், தனது வருமானம் போன்றவற்றைக் கொண்டு பிள்ளைகளைப் படிக்க வைத்தார். சீதாலெட்சுமியின் மூத்த மகன் ராமச்சந்திரன் வங்கி மேலாளராக இருந்து ஓய்வுபெற்றிருக்கிறார், மூத்த மகள் ராதா மின்னணு, தகவல் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்தவர், இளைய மகன் சாரங்கநாதன் ஒளிப்பதிவுக் கலைஞர், இளைய மகள் பாரதி மனநல மருத்துவர். தன் பிள்ளைகளுக்கு எப்படிப்பட்ட வாழ்க்கை அமைய வேண்டும் என்று கு.அழகிரிசாமி ஆசைப்பட்டிருப்பாரோ அதை நிறைவேற்ற சீதாலெட்சுமி பட்டிருக்கும் துயரங்கள் கொஞ்சநஞ்சமல்ல. "இதற்கெல்லாம் காரணம் அவருடைய மனவுறுதிதான்" என்கிறார் அவருடைய மகன் சாரங்கன். கு.அழகிரிசாமிக்கு சீதாலெட்சுமி வழங்கிய மகத்தான 'அன்பளிப்பு' இதுதான்.

காணொளிகள்

01] அன்பளிப்பு - கு.அழகிரிசாமி

https://www.youtube.com/watch?v=FEUz8Myglz4 [13:06]

02] நல்லவள் | கு. அழகிரிசாமி

https://www.youtube.com/watch?v=aFFWbIyo3RA [22:51]

03] அன்பளிப்பு | அழகிரிசாமி|சிறுகதை

https://www.youtube.com/watch?v=JISdIshgFk0 [47:12]

அன்பளிப்பு என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது கு. அழகிரிசாமி (Ku. Alagirisami) (செப்டம்பர் 23, 1923 - சூலை 5, 1970) குறிப்பிடத்தக்க தமிழ் எழுத்தாளர். 20-ஆம் நூற்றாண்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளராகத் திகழ்ந்த அழகிரிசாமி, சிறுகதை, கட்டுரை, புதினங்கள், நாடகங்கள், மேடை நாடகங்கள், கவிதைகள், கீர்த்தனைகள், மொழிபெயர்ப்புகள் என்று பல துறைகளில் சாதனை புரிந்துள்ளார். இவர் எழுத்தாளர் கி. ராஜநாராயணின் இளமைக் கால நண்பர். தமிழ் நேசன் (மலேசியா), சக்தி, சோவியத் நாடு, பிரசண்ட விகடன் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றினார். இலக்கிய உலகில் இவரது சிறுகதைகள் புகழ்பெற்றவை. 1970 இல், இவரது அன்பளிப்பு என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது.

04] கு.அழகிரிசாமி எழுதிய "ராஜா வந்திருக்கிறார்" சிறுகதை
https://www.youtube.com/watch?v=kn3ao5pfgeU [35:19]

05] கு.அழகிரிசாமி எழுதிய "இருவர் கண்ட ஒரே கனவு" சிறுகதை
https://www.youtube.com/watch?v=uobqb9wrZHs [18:04]

06] கு. அழகிரிசாமியின் தியாகம் சிறுகதை.தமிழ் சிறுகதை வாசிப்பு
https://www.youtube.com/watch?v=9xfIbUB_29M [16:27]

07] இரு சகோதரர்கள் கு. அழகிரிசாமி சிறுகதை
https://www.youtube.com/watch?v=ajOtt63zK3k [33:39]

இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் எழுத்தாளர் கு. அழகிரிசாமிக்கென்று ஓர் தனித்த இடமுண்டு. அவரது நூற்றாண்டு கொண்டாடப்பட்டு வருகின்ற இன்றைய சூழலில் அவரது படைப்புகள் பல மறுபதிப்பு செய்யப்பட்டு வருகின்றன. அவரது மொத்தத் தொகுப்புகளும் சமீபத்தில் வாசிக்கக் கிடைக்கின்றன. இரு சகோதரர் என்ற கதை எழுதப்பட்டு 64 ஆண்டுகள் கடந்தாலும் அந்தக் கதையின் வாழ்வியல் விவாதத்திற்குரியது. எது தியாகம்? எது உலகப்பிரச்சினை? மனிதங்களின் மனம் எதை முன்வைக்கிறது? வாழ்க்கைச் சிக்கல்கள்? பெண் மனம் எனப் பல விசயங்களைக் கதை விவாதிக்கிறது. தொடர்ந்து கு. அழகிரிசாமியையும் வாசிப்போம். விவாதிப்போம்.

08] கு.அழகிரிசாமி சிறுகதை- வெறும் நாய்
https://www.youtube.com/watch?v=TgNuFuhfJeA [45:29]

(😊)(😊) அழகிரிசாமி (😊)(😊)